உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் ௰௫ { பிரமாதி, மார்கழி } மலர் ௯

| | | |
|---|---|---|
| ௧. | மெய்ப்பாட்டியல்<br>திரு. S. சோமசுந்தர பாரதியார் அவர்கள் M.A., B.L. | 333 |
| ௨. | தொல்காப்பியமும் சங்கநூல்களும்<br>வித்துவான் திரு. மா. இராசமாணிக்கம் அவர்கள் B.O.L. | 336 |
| ௩. | பிராட்டிக்கிராவணன் தொட்டபழியுண்டா?<br>திரு. R. பொன்னுசாமிபிள்ளை அவர்கள் | 344 |
| ௪. | தமிழ்ச்சொற்களின் விஞ்ஞான அமைப்பு<br>வித்துவான் திரு. ச. தருஸ் அந்தோணி அவர்கள் | 349 |
| ௫. | வள்ளல் கண்டீரக்கோப் பெருநள்ளி (நாடகம்)<br>திரு. சிவ. துப்புசாமி அவர்கள் | 353 |
| ௬. | கலைச்சொற்கள்<br>திரு. T. S. வேலாயுதம்பிள்ளை அவர்கள் B.A., L.T. | 361 |
| ௭. | பிழையுற்ற பாடல்களும் திருத்தங்களும்<br>திரு. வே. மு. ஸ்ரீநிவாச முதலியார் அவர்கள் | 365 |
| ௮. | தமிழ்ச்செய்திகள் | 367 |
| ௯ | புத்தக மதிப்புரை | 371 |
| ௰. | நன்கொடைகள்<br>பொழிற்றொண்டர் | 372 |

பொழிற்றொண்டர்:
செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| | | |
|---|---|---|
| துணர் ௰௫ | பிரமாதி, மார்கழி | மலர் ௬ |


# மெய்ப்பாட்டியல்

திருவாளர், S. சோமசுந்தரபாரதியார் அவர்கள் M. A., B. L.,
பசுமலை

(முற்றொடர்ச்சி, துணர்: 15, மலர்: 8, இதழ்: 301)

சூத்திரம் 8

அணங்கே, விலங்கே, கள்வர்தம் மிறைஎனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே

கருத்து :— இஃது, அச்ச வகைநான்கும் அவற்றினியல்பும் உணர்த்துகிறது.

பொருள் :— கூறுமலே விளங்கும்.

குறிப்பு :— காட்சி கடந்து காரணங் காணுவிடத்துக்கடவுள் மேல் ஏற்றிக்கூறு முலகியலில் துன்புறுத்தும் சூர் அல்லது இயவுளாக் கொள்வதை அணங்கென்பது பழவழக்கு. கள்வர் : அலைத்துப்பொருள் வௌவுவோர். இறை ; குற்றங் கடிந் தொறுக்கும் வேந்து. குடிக் குற்றம் ஒறுத்தோங்கும் அறம் பிற வேந்தற்கின்மையின் மிறைகடியும் ஒறுப்பச்சம்தரும் வேந்தைத் " தம்மிறை " எனச் சுட்டிய பெற்றி யறிக. அச்சஏதுவாம் தம் மிறையை (தவறை) யும் அதற்குரிய ஒறுப்பாலச்சுறுத்தும் தம் இறையையும் ஒருங்கே " தம்மிறை " எனச்சுருக்கி விளக்கிய செவ்வியுணர்க. இனிப் பிணங்கல்: மாறுபடல், நெருங்கல் எனும் பொருட்டாம். மாறுபட்டு நெருங்கக் கூடுமெதுவும் அஞ்சப் படாதாதலின் " பிணங்கல் சாலா அச்சம் நான்கே " என்றிந் நான்கன் பொதுவியல் விளக்கப்பெற்றது. எனவும், ஏகாரங்களுள் முன்னவையும் எண்குறிக்கும்; ஈற்றேகாரம் தேற்றம், அசையுமாம்.

**சூத்திரம் 9**

“கல்வி, தறுகண், இசைமை, கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே”

**கருத்து :—** இது, பெருமிதவகையும் இயல்பும் கூறுகிறது.

**பொருள் :—** கல்வி முதல் கொடையீறாக நான்கும் புகழத் தக்க பெருமித வகையாம்.

**குறிப்பு :—** பெருமிதம், வெறுப்புக்குரிய செருக்கன்று; வீறு தரும் தருக்காகும். எனவே, புகழ்க்குரிய பெருமையிற் பிறக்கும் மகிழ்வாம். இதன் பழியில்சீர்த்திக்குரிய பெருமைப் பெற்றி தோன்ற “சொல்லப்பட்ட பெருமிதம்” என விளக்கப்பட்டது. ‘சொல்’ புகழாதல் வெளிப்படை. ஆகையால் கல்வி, ஆண்மை அல்லது செம்மற்றிறல், சீர்த்தி, வள்ளன்மை என்பவை மீக்கூறப்பெற்றுப் புகழ்தற்குரிய பெருமை புணர்வாதலின், இவை நான்கும் பெருமித வகையாயின.

‘என’—எண்ணிடைச்சொல். ஈற்றேகாரம் அசை, தேற்றமுமாம்.

**சூத்திரம் 10**

“உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என்ற
வெறுப்பின் வந்த வெகுளி நான்கே”

**கருத்து :—** இதில், வெகுளி வகை நான்கும் அவற்றின் பொது இயல்பும் கூறப்பெறுகின்றன.

**பொருள் :—** உறுப்பறை = சினைசிதைத்தல்; அஃதாவது அங்கபங்கம்; குடிகோள் = ஓம்பற் குரியாரை நலிதல்; அலை = அடித்தும் இடித்தும் அலமலரச் செய்தல்; கொலை = கோறல்; என்று வெறுப்பின் வந்த வெகுளி நான்கே = இவை நான்கும் வெறுப்பால் விளையும் வெகுளி வகைகளாகும்.

**குறிப்பு :—** உறுப்பின் ஊறும், சுற்ற நலிவும் அலைப்பும் கொலையும் வெறுப்பில் விளையும் சினமுளையாமாதலின் இவை “வெறுப்பின் வந்த வெகுளி நான்கே” என அவற்றினின இயல்புடன் குறிக்கப்பட்டன. தீதில் சினம் அறமாதலின், அதனை விலக்கி,வெறுத்தற்குரிய வெகுளிவகையே இங்குக்கூறப்பட்டன. ஈண்டு, “என நனி வெறுப்பின் வந்த” என்றிளம்பூரணர் கொண்ட பழைய பாடம், வெறுப்பு மிகுதியால் விளையும்

வெகுளியின் பெற்றியை இனிது விளக்குதலறிக. இதில் "என்று", இளம்பூரணர் பாடத்து "என" போல எண் குறிக்கும். என்றும் எனவும் ஒடுவும் என முன்குறித்த இடையியற் சூத்திரத்தானறிக. ஈற்றேகாரம் தேற்றம், அசையுமாம்.

## சூத்திரம் 11

"செல்வம், புலனே, புணர்வு விளையாட்டென்
றல்லல் நீத்த உவகை நான்கே."

கருத்து:-இஃது, உவகைவகையும் இயல்பும் உணர்த்துகிறது.

பொருள்:—செல்வம் = திரு அல்லது ஆக்கப் பெருக்கம்; புலன் = அறிவினூறும் அகமகிழ்வு; புணர்வு = கற்புறு காதற் கூட்டம்; விளையாட்டு = தீதில் பொய்தல்; என அல்லல் நீத்த உவகைநான்கே = இந்நான்கும் அலக்கண் விலக்கிய மகிழ்ச்சி வகையாகும்.

குறிப்பு:—செல்வம், அகமகிழ்விக்கும் ஆக்கப் பொதுப் பெயர். யாண்டும் எனைத்தளவும் உளமுளைய வருவதெதுவும் உவகைப் பொருளாகாது. புலன் ஈண்டுக் கல்விப்பயனுமறிவைக் குறிக்கும். அரிய புதிய ஆய்ந்து நுட்பமுணர்ந்துண்மகிழ்தற் கேதுவாமறிவு ஈண்டுக் குறிக்கப்பட்டது. நிறைந்த கல்வி உதவும்புகழ்க்குரிய முன்குறித்தபெருமித உணர்வின் உள்ளூறு மறிவின்பம் வேறுதலின், அவ்வறிவின்பம் இங்குப் "புலனுவகை" எனக்கூறப்பட்டது. இதனை உரனொடு முரணும் உணர்வு வகையாம் ஐம்பொறி நுகர்வென இளம்பூரணர் கூறுவராலெனின், பொறிவாயிலைந்தும் அவித் தடங்கற்பாலவென வெறுக்கப் பெறுதலானும், அவற்றில் அல்லல் நீத்தல் கூடாமையானும், அது பொருளன்மையறிக. இனி, புணர்வு, அன்பொடு புணர்ந்த இன்பத்திணை ஐந்தில் இருவயினொத்த கற்புறு காதற்கூட்டமேயாம். தேறுதலொழிந்த தீதுறு காமமெதுவும் எஞ்ஞான்றும் "பகை, பாவம், அச்சம் பழி, என நான்குமிகவாவாம்" ஆதலின் அஃது அல்லல் நீத்த உவகைப் பொருளாகாமை ஒருதலை. அதனாலீண்டுப் புணர்வு ஏமமில் காமச் சுவை கருதாது, கற்புறு காதற் கூட்டத்தையே சுட்டுவதாகும். விளையாட்டு, மக்கள் உளங்களித்தாடும் தீதறியாப் பொய்தல், அல்லது ஓரைவகை அனைத்தும் குறிக்கும், அஃது இருபாலார்க்கும் ஏற்பதாகும். ஆண்மையழிந்து மகளிரை இழிக்கும் பிற்காலத்தில், விளையாட்டை

அவருக்குத் தனி உரிமையாக்கியதோடமையாமல், விளையாட்டுப் பொதுப் பெயர்க்கெல்லாம் மகளிர் விளையட்டெனப் பொருளும் கொள்ளப்பட்டது. கடலாடல் புதுப்புனல் குடைதல் உண்டாட்டு, தீதுதவாக்கூத்து, வட்டாடல் போல்வனவெல்லாம் விளையாட்டு வகையாகும். எனில், பீழையுதவுமெதுவும் அழுகை—இளிவரல் முதலிய உணர்வின் வழித்தாமாதலின் அவற்றை விலக்கி, யாண்டும் எஞ்ஞான்றும் துன்பம்தீர்ந்த இன்ப வகையே உவகையாகுமென்றதன் இயல் விளங்க "அல்லல் நீத்த உவகை" எனத் தெளிக்கப்பட்டது.

புலனே என்பதன் ஏயும் பின் 'என்றும்' எண் குறிப்பன. ஈற்றேகாரம் தேற்றம், அசையுமாம்.

(தொடரும்.)

# தொல்காப்பியமும் சங்கநூல்களும்*

வித்துவான் திரு. மா. இராசமாணிக்கம் அவர்கள் B.O.L.
தமிழாசிரியர், முத்தியால்பேட்டை உயர்நிலைக்கல்விக்கூடம், சென்னை.

(முற்றொடர்ச்சி துணர் 15, மலர் 8, பக்கம் 331)

## கடைச்சங்க நூல்கட்குத் தொல்காப்பியம் சிறந்த இலக்கணமா?

தொல்காப்பியர் காலத்திலேயே பரந்துபட்ட இலக்கண நூல்கள் இருந்திருத்தல் வேண்டுமென முன்னர் விளக்கிக் கூறப் பட்டமையாலும், அவர் காலத்தினவும் முற்பட்டனவும் ஆய

* இது, கரந்தைத் தமிழ்ச்சங்கத்து 28-ம் ஆண்டுவிழாவின்போது (19—8—'39) யாழ்ப்பாணத்துப் பரமேசுவரர் கல்லூரித் தலைவர் திரு. சு. நடேசபிள்ளை B.A., B.L. அவர்கள் தலைமையில் ஆற்றிய சொற்பொழிவு.

பாக்களே இலக்கியங்களில் இடம்பெற்று இருத்தலாலும், காலத்தால் முற்பட்ட பாக்கள், தொல்காப்பியரது இலக்கணத்தை வைத்துச் செய்யப்பட்டிருத்தல் இயலாதாதலாலும், அவர் காலத்தில் அவரைப்போலவே இலக்கண ஆசிரியர் பலரும் இருந்திருத்தலால் அவர்களையும் அவர்க்கு முற்பட்ட தொல்லாசிரியரையும் பின்பற்றிக் கடைச்சங்கத்தார் பாடல்கள் செய்திருத்தல் கூடியதே ஆகலாலும் 'தொல்காப்பியம் கடைச் சங்கத்தார்க்குச் சிறந்த இலக்கணமாக இருந்தது' எனத்துணிந்து கூறல் அத்துணைப் பொருத்தமுடையதன்று. இவ்வுண்மையை வலியுறுத்தத் தொல்காப்பியத்து ஒவ்வோர் இயலினின்றும் சூத்திர விதிகளைக் காட்டிச் சங்கச் செய்யுட்களோடு அவை மாறுபடும் விதத்தையும் சிலர் காட்டுவர்; சிலர் மாறுபடுவர். யாப்பருங்கல விருத்தியுரை, காரிகையுரை இவற்றை நன்குபடித்தவர், 'தொல்காப்பியர் முதலிய ஒருசார்-ஆசிரியர் இங்ஙனம் கூறுப ; வேறொரு சார்-ஆசிரியர் இன்னபடி கூறுப' என்ப. பல இடங்களில் வந்திருத்தலை அறிந்திருத்தல்கூடும். இதனால், யாப்பிலக்கண முறைகளைப்பற்றிய கருத்துவேறுபாடுகள் தொல்காப்பியக் காலத்திலேயே இருந்திருத்தல் கூடியதே எனல் அறியக்கிடக்கிறது. இங்ஙனமே பிற இலக்கண நுட்ப மாறுபாடுகள் இருந்திருத்தல் இயல்பேயாகும். இதிற் புதுமை ஒன்றும் இல்லை.

தத்தம் புதுநூல் வழிகளால் புறநானூற்றுக்குத் துறை கூறினாரேனும், அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகை நூல்கட்கு நூலாகலின், அவர் சூத்திரப் பொருளாகத் துறை கூறவேண்டும் என்றுணர்க" எனப் புறத்திணை இயல் 35-ம் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் கூறி இருத்தல் ஒன்றே— தொல்காப்பியம் ஒன்றே தொகைநூல்கட்கு அத்துணைச் சிறந்த இலக்கண நூலென்று துறை கூறினோர் கருதவில்லை என்பது பெறப்படும்.

தொல்காப்பிய விதிகட்கும் தொகைநூற்செய்யுட்களுக்கும் உள்ள வேறுபாடுகளைக் கண்ட நன்னூலார், அவற்றுள் பலவற்றை இயன்ற அளவுகொண்டு தழுவி, இலக்கணம் செய்திருத்தலும் இம்முடிபை அரண் செய்வதாகும். எனவே, இதுகாறும் கூறியவற்றால், உரையாசிரியர்கள் கருதியபடி களவியல் உரைகாரர் கூறியபடி அத்துணைச் சிறந்த நூலென்று தொல்காப்பியம் ஒன்றையே கடைச் சங்கப் புலவர் தழுவிச் செய்யுள் செய்திலர் என்பது அறியக்கிடத்தல் காண்க. இதனைக் கண்ணுறும் பேரறிஞர்களை நடுவு நிலைமையினின்று ஆராய்ந்து முடிபு கொள்ள வேண்டுகிறோம்.

## தொல்காப்பியத்துக்கும் சங்க இலக்கியத்துக்கும் உள்ள பொருள் பற்றிய வேறுபாடுகள் :

இத்தலைப்பில் இரண்டொன்றினைச் சுட்டிச்செல்லலே இவண் செயற்பாலது ; வேறுபாடுகளை அறிதற்குமுன் பொதுவாக இப்பெருநூல்கட்கும் சிறப்பாகத் தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்கும் உரைஎழுதிய ஆசிரியர்களைப்பற்றிச் சிலஅறிதல் நன்றும். தொல்காப்பியர்காலம் சுமார் கி.மு. 6-ஆம் நூற்றுண்டெனின், இவ்வுரையாளர் காலம்சுமார் கி. பி. 13, 14-ம் நூற்றுண்டாகும். அஃதாவது நூலாசிரியர் காலத்துக்கும் இவர்க்கும் இடைப்பட்டகாலம் சுமார் 1700 முதல் 2000 ஆண்டுகள்வரையில் ஆகும். இத்துணை நெடுங்காலத்துக்குப் பல நூற்றுண்டுகட்கு முற்பட்டதும், தனக்கேற்ற இலக்கியங் களைப் பல நூற்றுண்டுகட்கு முன்னரே இழந்துவிட்டதுமாகிய தொல்காப்பியத்துக்கு உரை கூறுவதெனின், அவ்வுரை எந்த அளவில் சிறப்புற்றதாக இருக்கும் என்பதை நுண்ணறிவுடை யோர் நன்கறிதல் கூடும், நிற்க.

நூலாசிரியர் காலத்தில் தமிழகத்தில் சிறப்பாகவும் வட நாட்டில் பொதுவாகவும் உண்டாகியிராத மாற்றங்கள் உரை யாசிரியர்கள் காலத்தில் உண்டாகியுள்ளன. தொல்காப்பியர் காலத்தில் வடமொழி நூல்கள் தமிழகத்தில் மிக்கில்லை ; அவர் காலத்தில் அறநூல்கள் — போதாயனர், அசுவலயனர் முதலியவர் செய்த பிற்காலத் தறநூல்கள், சிரௌத சூத்திரங்கள், கிருஃகிய சூத்திரங்கள் என்பனவும் பிறவும் தமி ழகத்தில் பரவாதகாலமாம். அவை வடநாட்டில் செய்யப்பெற்ற காலமே கி.மு. 800 முதல் கி.மு. 300வரை, என ஆராய்ச்சியாளர் கூறுவர்.[1] இச்சூத்திரங்களின் காலத்தேதான் சாதிக்கட்டுப் பாடு இந்தியாவில் (தமிழகம் இல்லை) வன்மைபெற்றது. எனி னும், இன்றளவும் அவற்றுள் கூறப்படும் நான்குவருணம் தமி ழகத்தில் இல்லை என்பதைப் பாமரரும் அறிவரன்றே ? உண்மை இங்ஙனம் இருத்தலின், தொல்காப்பியர் சாதிகளைப் பற்றிய பேச்சையே தம் நூலுள் கூறிலர். அவர் கூற விரும்பி மக்களது அகவாழ்வைக் கூறும் அகத்திணை இயலில் 'ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன' என்று வரும் சூத்திரத்துக்கு முன்னரே கூறியிருத்தல் வேண்டும் ; அல்லது புறத்திணை இயலிலேனும் கூறி இருத்தல்வேண்டும். மரபியலில் கூறியிருத்தல் பொருந்தாதோ ? எனின், பொருந்தும். ஆயின்,

1 Prof. N. K. Dutt's 'Origin and growth of caste in India', p. 134

அங்கும் அந்தணர் முதலியோரைக் குறிக்கும் சூத்திரங்கள் தக்க இடத்தில் இல்லை என்பதை நோக்க, 'அவை இடைச் செருகல்' என்பது நன்கு வலியுறுதல் காணலாம், என்னை? மரபியலில் சூ. 69. விலங்கைப் பற்றியது; சூ. 70 முதல் 84 முடிய அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்போரைப் பற்றியவை; சூ. 85 முதலியன புல்லைப் பற்றியன. உயிர்கள் வகையில் இறங்கு முறையிற் சொல்லி இருந்தால் மனிதனைப் பற்றிய சூத்திரம் முதற்கண் வந்திருத்தல்வேண்டும்; ஏறு முறையில் சொல்லியிருந்தால் கடையில் வந்திருத்தல்வேண்டும். இரண்டும் இன்றி முதலில் 4 அறி உயிர், இடையில் 6 அறிவுயிர், பின்னர் ஓர் அறிவுயிர் எனக் கூறிச்செல்லுதல் இயற்கைக்கு மாறுபட்டதாகும். எனவே, இயற்கைக்கு மாறான (மரபுக்கு மாறுபட்ட) இச்சூத்திரங்கள் 'இடைச்செருகல்' என்பதில் ஐயம் இன்று! இதனைப் பின்னும் விளக்குதும்.

"அந்தணாளர்க்கு அரசு வரைவின்றே" என்பது மேற் கூறப்பெற்ற 15 சூத்திரங்களுள் ஒன்று. 'அந்தணர்—பிராமணர்' என்பதே இதுகாறும் (திருவள்ளுவர் நீங்க) அனைவரும் கொண்டுள்ள பொருள். அஃது உண்மையாயின், பிராமணர்க்கு அரசு வரைவின்று' என்பது தொல்காப்பியர் கருத்தென நாம் கொள்ளவேண்டும்; கொள்ளின் தம் காலத்துக்கு ௩, ௪ நூற்றாண்டுகட்குமுன், 'தமிழகம் குடியேறிப் பிழைக்கவந்த பிராமணர் அரசாளலாம்' எனச் சட்டம் செய்த பாபம் தொல்காப்பியரைச் சாரும் அன்றோ? இஃதொன்றே போதும் இவை 'இடைச் செருகல்' என்பதற்கு; இதனை மேலும் விரிப்பிற் பெருகும்.

உரையாசிரியர்கள் தங்கள் காலத்தில் வேரூன்றியிருந்த சாதிப்பாகுபாட்டை—அதிலும் வடமொழிப் பாகுபாட்டை உளங்கொண்டு உரைகூறிச்செல்லல் கொடுமையானது! வேளாளரை இருவகையாகப் பிரித்து இடர்ப்படும் நச்சினார்க்கினியரது நிலை இரங்குதற்குரியது!

"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன" என்னும் அகத்திணை இயல் சூத்திரத்துக்கு 'உயர்ந்தோர்—அரசர், அந்தணர்' என இளம்பூரணரும், 'அரசர், அந்தணர், வணிகர்' என நச்சினார்க்கினியரும் பொருள் கூறினர். இஃது உண்மையாயின், இதுவே தமிழகத்தின் அடிப்பட்ட பழக்கமாயின், இம்மூவகைப் பிரிவிலும் சேராத பாணர் மரபினரான ஔவையார் அதியமானால்

ஏவப்பட்டுக் கோவலூர் அரசன்பால் தூதுசென்றிருத்தல் இயலுமா? அம்மாற்றரசன் அவரைவரவேற்றுத் தன்படைக் கலக் கொட்டிலைக் காட்டியிருப்பனோ? அறிஞர்களே, நன்கு கருதிப் பாருங்கள்.

இனிக் கற்பியலில் "மேலோர்மூவர்க்கும்புணர்த்தகரணம் கீழோர்க் காகிய காலமும் உண்டே" என்னும் சூத்திரத்தில் வரும் 'மேலோர்மூவர்' என்பதற்கு 'அரசர்' அந்தணர், வணிகர்' எனக்கூறி, 'கீழோர்-வேளாளர்' எனக் கூறி இருத்தல் வருத்தத் தோடு கவனித்தற்குரியது. "அந்தணர் முதலியோர்க்கும் **மகள் கோடைக்குரிய வேளாண் மாந்தர்க்கும்** தந்திர மந்திர வகையான் உரித்தாகிய காலமும் உள" என்று அவர் கூறியிருத்தல் நமது தமிழ் மரபுக்கு எத்துணைமாறுனது!

இதற்கே இளம்பூரணர், "முற்காலத்துக் கரணம் பொதுப் பட நிகழ்தலின் எல்லார்க்கும் ஆம் என்பதும், பிற்காலத்து வேளாண் மாந்தர்க்குத் தவிர்ந்ததெனவும் கூறியவாறுபோலும். அஃதாமாறு **தருமசாத்திரம்** வல்லாரைக்கொண்டு உணர்க" என்ருர்.

ஆரியராய பிராமணர், சத்திரியர், வைசியர் என்பார், தாம் அடிமையாகக் கொண்ட 'சூத்திரர்—தாசர்' என்போரை விலக்கற்கு ஏற்பட்ட விதிகளையும், சூத்திரர் உயர்வடையத் தொடங்கியதும் ஆரியர்அவர்கட்குச் சமுகத்தில் ஓரளவு உரிமை தந்தனர் என்பதை அறிவிக்கும் தரும சூத்திரங்களையும் உளங் கொண்டே நச்சினர்க்கினியர், சூத்திரரே இல்லாத தமிழகத்தில் தருமசாத்திர விதிகளைப்புகுத்தி **வேளாளரைச் சூத்திரராக்கி விட்டனர்.** சுருங்கக்கூறின் இவ்வுரைகள் தமிழர் மனத்தைப் பெரிதும் புண்ணுக்குவன. வடநாட்டு சாதிப் பாகுபாடுகள் தமிழகத்தில் தோன்றியகாலம், கடைச் சங்கத்தின் பிற்பகுதி யான முதல் இரண்டு நூற்ருண்டுகளில் எனக்கொள்ளலாம். கி. பி. உ-ஆம் நூற்ருண்டினனுன ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன்,

"வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே"

என்று புறநானூற்றுள் (183) பாடியுள்ளான். 'வேற்றுமை தெரிந்த நாற்பால்' தொல்காப்பியத்தில் இல்லை! கி. பி. உ-ஆம்

நூற்றாண்டுப் பாடலாற்றான் தெரிகிறது. இவ்வேறுபாடு வட மொழியாளரது வேதமதம் தமிழகத்தில் பரவத் தொடங்கிய போது ஏற்பட்டது என்னலாம்.

ஆரியர்க்குள்ளும் முதல் மூன்று வேறுபாடுகள் இந்தியாவில் அவர்கள் வந்தபின் ஏற்பட்டன அல்ல! அவர்கள் மத்ய ஆசியா விலிருந்து பல இடங்கட்கும் பிரிவதற்கு முன்னரே ஏற்பட் டிருந்தவை. இவ்வுண்மையை இந்து—ஐரோப்பிய ஒப்பிலக் கணத்தால் அறியலாம்:—

I (1) பரெச்மன் (Baresman) -புல்கட்டு (பாரசீகச்சொல்)
(2) பிரமன் (Brahman) -யாகம் (வடசொல்)
(3) ஃபிலாமென் (Flamen) -புரோகிதன் (இலத்தீன் சொல்)

II (1) ஃபிலாமோனீயம் (Flamoniam) புரோகிதம் (இல-சொல்)
(2) பிரமணீயம் -புரோகிதம் (வடசொல்)

III (1) வெர்பேன (Varbana) நாணற்புல் (இல-சொல்)
(2) தருப்பை - ,, (வடசொல்)

IV (1) இரக்ச் (Rex) -அரசன் (இல-சொல்)
(2) இரேக் (Raighk) - ,, (செர்மன் சொல்)
(3) இராசன்ய - ,, (வடசொல்)[1]

இவற்றானும், கொலை வேள்வியைப் புகழ்ந்து கூறும் இலத்தீன் வடமொழிப் புலவர்கள் பாடலாலும், பாரசீகம், இத்தாலி, செர்மனி இவற்றின் பண்டை வரலாறுகளானும் பண்டை ஆரியர்க்குள் அவர்கள் முதலில் பிரிவதற்கு முன்பே 'பிராமணர், சத்திரியர், வைசியர்' என்னும் பிரிவுகளைப் பெற்றிருந் தார்கள் என்பது தெளிவாம். இங்ஙனம் நடு ஆசியாவில் ஏற்பட்ட ஆரியச்சாதிகள்-சாதி அறியாத் தமிழகத்தில் இருந்த தாகக் கற்பனை செய்துகொண்டு இந்தஉரையாசிரியர்கள் உரை கூறிச்செல்லல் எவ்வளவு பெருந்தவறு, என்பதை அறிஞர் கருதுவாராக!

தமிழகத்தில் கூறப்படும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் முதலிய பெயர்கள் தொழில் பற்றியவையே அன்றி

1 C. M. Mulvany's 'The Indo-European Language' p. p. 55, 93-95.

வடநாட்டுச்சாதிகளைப் போலப்பிறப்புப் பற்றியவை அல்ல! அல்ல!!

1. "அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்" என்பது குறள்.

2. அரசாள்பவர் **அரசர்.** அவர் ஆயராக இருக்கலாம் பரதவராக இருக்கலாம்; கள்ளராக இருக்கலாம்; மறவராக இருக்கலாம்; வேறு எவராகவேனும் இருக்கலாம். 'தென் பரதவர் தென்திசைக்கண் குறுநில மன்னர்'; பரதவர் மீன் பிடிக்கும் நெய்தல் நில மக்கள். அவர்கள் தலைவர்களாய குறு நில மக்களே இங்கே கூறப் பெற்றவர்.

3. **வணிகர்:**—இவர்கள் இருக்குவேதகாலத்தில் ஆரியரால், 'வேள்வி செய்யாதவர்—கொடிய மொழியைப் பேசுபவர்—தாசர்—கால்நடைகளை வளர்ப்பவர்—பேராசையுள்ளவர்' எனப் பலபடியாக இழித்துக் கூறப்பட்ட **திராவிட மக்களாவர்.** இவர்களை இருக்குவேதம் **'வணிக்'** என்றும் **'பணிக்'** என்றும் கூறுகிறது.[1] இவரே தமிழகத்தில் **'வணிகர்'** எனவும், மலையாள நாட்டில் **'பணிக்கர்'** எனவும் கூறப்படுகின்றனர்; குசரம் முதலிய இடங்களில் **'பணியா'** எனப்படுவர். எனவே, இவர்வேறு; ஆரியவைசியர்வேறு என்பது இங்குஅறியத்தக்கது. தமிழகத்து வணிகர், அப்பவாணிகர், பிட்டுவாணிகர், மீன் வாணிகர், உப்பு வாணிகர் எனப் பல திறப்படுவர் என்பது சிலப்பதிகாரம் முதலியவற்றால் அறியலாம். உண்மை இங்ஙனம் இருப்ப, ஆரிய சாதிக்குழப்பங்களை மனத்தில்கொண்டு உரையாசிரியர்கள் உரைகூறிச்சென்றமையும் அவ்வுரையைச் சிறிதளவும்ஆராயாது அப்படியே போற்றுதலும் அறிவுடையோர் வருந்தற்கு உரியனவேயாகும். மேலும், **தமிழர், என்றும் எவர்க்கும் அடிமைப் பட்டவரல்லர்** என்பதை வரலாற்றுநூலே கூறுகின்றது. இந்தியாவின் பெரும் பகுதியாய்ப் பிடித்தாண்ட **அசோகன்** ஆட்சியிலும் தமிழகம் தன்னாட்சி பெற்று நிலவியதாகும். சேர, சோழ, பாண்டியரை நேச அரசர்கள் என்று அசோகனின் சாசனங்கள் அறைகின்றன. எனவே, ஆரியர்க்குத் தமிழகம் ஒரு போதும் அடிமைப்பட்டதில்லை 'சூத்திரர்' என்பதோ 'சற்சூத்திரர்' என்பதோ தமிழர் எக்காலத்தும் பெற்றிலர்! பெற்றிலர்!! பெற்றிலர்!!!

---

1 Prog. N. R. Dutt's 'Aryanisation of India', p. 105.

II **ஆரியக் கலப்பு :—** தொல்காப்பியத்தில் ஆரியக்கலப்பு மிகுதியாகக் காணப்படவில்லை. ஆனால், கடைச்சங்க இலக்கியங் களின் கடைப்பட்ட காலத்தில்—முதல், இரண்டு நூற்றாண்டு களில் ஆரியர்—தமிழ் அரசர்க்கு அறவுரை கூறவும் வேள்வி நடத்தத் தூண்டவும்முனைந்து விட்டனர்என்பது தெளிவாகிறது. சிலப்பதிகாரத்தில் 'மாடலன்' பெற்றிருந்த சிறப்பென்னை! தொல்காப்பியர் காலத்தில் ஆரியர்க்கும் தமிழர்க்கும் போரில்லை. கடைச்சங்க காலத்தில் (1) மோரியர் படையெடுப்பு (2) கரிகாலன் இமையப் படையெடுப்பு (3) நெடுஞ்சேரலாதன் இமையப்படை யெடுப்பு (4) செருப்பாழி எரிந்த இளஞ்சேட்சென்னியின்போர் (5) செங்குட்டுவன் வடநாட்டுப் போர், நெடுஞ்செழியன்—ஆரியப் போர் முதலியன இலக்கியங்களில் காணப் படுவன ஆகும்.

## முடிவுரை

இதுகாறும் ஆராய்ந்தவற்றால், (1) தொல்காப்பியம் சுருக்க நூல், (2) அதன் காலம் ஏறத்தாழ கி.மு. 6 அல்லது 7ஆம் நூற் றாண்டாக இருக்கலாம், (3) இப்போதைய சங்க இலக்கியச்செய் யுட்கள் இடைச்சங்கத்தைச் சேர்ந்தவையும் கடைச்சங்கத்தைச் சேர்ந்தனவும் ஆகும், (4) தொல்காப்பியர்க்கு முன்னும் ஒத்த காலத்திலும் இலக்கண ஆசிரியர்பலர் இருந்தனர்-ஆதலால்அவர் நூல்களையும் ஆதாரமாகக்கொண்டு இரு சங்கப் புலவரும் பாடி யிருத்தல் இயல்பே—ஆதலால், தொல்காப்பியமே இரண்டு சங்கங்கட்கும் இலக்கணநூல் என்றல் பொருந்தாது, (5) உரை யாசிரியர்களின் தவறான கூற்றுகளை ஆராயாது தமிழ் மரபைக் கெடுத்துவிடல் நம்மைநாமே அழித்துக்கொள்வதாகும், என்பன போன்ற செய்திகள் ஒருவாறு விளங்கும். இக்கட்டுரையில் உள்ள குணத்தைமட்டும் அறிஞர் கொள்வார்களாக!

தமிழ் வாழ்க! தமிழ்நாடு வாழ்க!!

உ

# பிராட்டிக்கிராவணன் தொட்டபழியுண்டா?

திரு. R. பொன்னுசாமி பிள்ளை அவர்கள்,
வடமொழியாசிரியர், போர்டு உயர்கலாசாலை, பாபநாசம்.

(முற்றொடர்ச்சி துணர் 15, மலர் 8, பக்கம் 308)

இதுவரையும் வான்மீகியாரின் சொற்கொண்டு தொட்ட குறை ஆராயப்பட்டது. இனி, அவர் நூலுக்கு உரைகண்ட உரவோர்கள் உரைக்கும் கருத்து யாதென ஆராய்தல் நல்லது.

பிராட்டியார்க்கு ஆளடிமை செய்தற்காகவே இராவணன் அவரை எடுத்தேகினான் என்பதே திருவான்மீகி ராமாயணத் திற்குரையுரைத்த பெரியோர்தம் பொதுக் கொள்கையாப் பொலிகின்றது. உயிர்களைப் பெருமாள்பால் ஓம்படை செய்து வீட்டுநெறி கூட்டுபவர் அப்பெருமாட்டியேயாதலால், தன்னையும் அங்ஙனம் ஓம்படுத்துத் தீவினைபாற்றி வீடு நல்குவர் என்ப துன்னியே எடுத்தேகினான் என்பர்.

ஆனல், அவன் எடுத்தேகிய சீதை உண்மைச் சீதையல்லர். நிழற் சீதையே யென்பர். அதற்குப் பற்றுக்கோடாகக் கந்த புராண முதலியவற்றினின்றும் மேற்கோள் காட்டுவர்.

இராவணன் சீதாபிராட்டியாரைப் பற்றுவான் என்பது தெரிந்த எரிக்கடவுள் அன்னார் கற்புக்குப் பழுது வாராமலும், அவன் அழிந்து கெடுதற்கு ஏற்பவும் உண்மைப் பிராட்டியை மறைத்து விட்டு, அவர் நிழலையே போலிச்சீதையாக மாற்றி மறைந்தனன். அந்நிழற்சீதையையே இவன் பற்றியெடுத்துப் போயினான். இது பற்றிக் கூர்மபுராணம் கூறுமாறு:—

ஸ்ருஷ்ட்வா மாயாமயீம்சீதா ஸராவண வதே$^{4}$ச்ச$^{2}$யா|
ஸீதாமாத$_{3}$ாய ராமேஷ்டாம் பாவகோந்தரதீ$_{4}$யத||

அத்தியாயம் 34.

(பொருள்) அவ்வெரிக்கடவுள் இராவணன் கொலையுண்ண வேண்டுமென்னும் விருப்பால், போலிச்சீதையைப் படைத்து விட்டு, இராம பிரானுக்கு உவப்பான மெய்ச்சீதையைத் தான் எடுத்தேகி மறைந்தனன், என்பது,

ஆக்கிநேய புராணத்திலும் இக்கருத்துப்படவே கூறப் பட்டுள்ளது. இதில், பிராட்டியின் நிழலை அச்சு அடையாள மெல்லாம் அப்பிராட்டியாராகவே தோன்றும்படி எரிக்கடவுள் படைத்ததாக விளக்கிக் கூறப்பட்டுளது.

இங்ஙனம் எரிபடைத்த சீதையே இராமபிரான் திருமுன் எரிபுக்குமறைய, முன்னம் எரிமறைந்த பழைய மெய்ச்சீதையே மீண்டும் பெருமாள் முன் தோன்றினர் என்பர்.

இனி, ஒருவன் ஒருத்தியின் உடலுறுப்புக்களை எடுத்தேகல் முடியுமேயன்றி, அவற்றின் நிழலை எடுத்தேகுமாறெங்ஙன்? என்றகேள்வி எழுமன்றே? அதற்கு அமைதி கந்தபுராணத்துக் காட்டப்படுகிறது. அதனை இதோபாருங்கள்.

ச$_2$ாயாக்$_3$ராஹித்வ மப்யஸ்தி சர்வவித்$_3$யா விஸாரதே$_3$|
கேஸச்ச$_2$ாயாம் பராம்ருஸய ஜானுச்ச$_2$ாயாம் ததை$_2$வச|
க்$_3$ருஹீத்வா ஜானகீம் ஹ்ருஷ்டோ லங்காம் பாராத் ஸ்ராவண :||

இது முக்கண்ணப் பெருமான் தம் உ(ரி)மைக்குக் கூறி யருளுவதாக இயன்றுள்ளது.

(பொருள்:—) "எல்லாக் கல்விகளினும் நல்ல புலமை வாய்ந்தவளே (கேட்பாய்) (அரக்கர்க்கு) நிழலைப்பற்றும் பெற்றிமையும் உண்டு. (அதனால்தான்) அவ்விராவணன் சீதா பிராட்டியின் கூந்தல் நிழலையும், தொடை நிழலையும்பற்றி, உளங் களிகூர இலங்கைக்கு எடுத்தேகினன்" என்பது.

இவ்வாறுகநிழலைப் பற்றுதல்முதலியசெயற்கரியசெயல்கள் (சித்துக்கள்) இராவணனுக்குப் பெரிதும் கைவந்தவை என்பது வான்மீகியார் வாய்மொழியானும் உணரப்படும்.

ஸீதாயார் வசனம் ஸ்ருத்வா த$_3$ஸக்$_3$ரீவ : ப்ரதாப வான்|
ஹிஸ்தே ஹாஸ்தம் ஸமாஹத்யசகார ஸுமஹத்$_3$வபு :||

(பொருள் :—) வெற்றிப் புகழ்மிகுந்த அப்பத்துத்தலை யிராவணன் சீதாபிராட்டியின் வாய்மொழியைக் கேட்டதும் கையொடு கையறைந்து, வானளாவிய தோற்றம் கொளும்தன், உடம்பு கொண்டான்.

முதலிற் சிறுதோற்ற முடையனாய் வந்த இராவணன், பிறகு, பெருந்தோற்றங்கொண்டான் என்பதால், 'அணிமா' 'கரிமா' என்னும் இரண்டும் அவற்குக் கைவந்தனவாகப் புலப் படுகின்றனவல்லவா? இவையே தம்மினமான மற்றவற்றையும் குறிக்கும். மற்றும் 'காமரூபிணம்' (விரும்பிய தோற்ற முடையான்) என்பதனானும் அது வலியுறும் என்க.

இனி, இராவணன்மட்டுமன்றி, அவற்குமுன் விராதன் என்பானும் பிராட்டியை இங்ஙனமே தொடைபற்றி எடுத்துளான். ஆனால், அவன் கூந்தலைப்பற்றவில்லை. இச்செய்கை இளையபெருமாளும் பெருமாளும் பார்க்கவே நிகழ்ந்தது. அதற்கும் உரைகண்ட பெரியோர் உரைப்பது இதுவே.

விராதன் தன் தீவினைக் கடலைப் போக்கிக்கொள்ளுதற்காகவே பிராட்டியைப்பற்றித் தோள்மேல் வைத்துக்கொண்டான். மனைவியெனும் எண்ணத்தோடன்று. அவன் பிராட்டியைப் பார்த்தவுடனேயே, இவர் வீடு தருதற்குரியர் என்னும் அறிவு பிறந்து, 'இவரை வழிபடுவேன்' என எண்ணி எடுத்தானென்பர். கடவுளைப்போற்றியோ தூற்றியோ எவ்வாறெண்ணினும் நன்மையே புரிவர். அதனால் அவர் மருந்தினை ஒப்பர் என்பர். கந்தபுராணத்தும் இக்கருத்துக்கிசையவே கூறி விளக்கப்படுகின்றது.

தில்லையங்கூத்தப் பிரானைப் பற்றிக் குமரகுருபரவடிகள் போற்றிக் கூறும்போது, அவரை மருந்துக் கொப்பாகக் கூறுகின்றார். மருந்தை ஒருவன் அகமகிழ்ந்துண்ணினும் தான்புரி நன்மையிற் குறையாது புரியும். அதுபோலவே, இப்பிரானும் தம்மைப்போற்றுவார்க்கும் தூற்றுவார்க்கும் ஒரு படித்தாகவே தம்மைக் காட்சியிற் காணுங்கால் அருள்புரிவர் என்று குறிப்பாகக் கூறினார். இக்கருத்துப் பின்வரும் அவர் பாடலடிகளால் நன்கு விளங்கும்.

"சிற்றுயிர்க் கிரங்கும் பெரும் பற்றப்புலியூ
ருற்றநின் றிருக்கூத் தொருகா னோக்கிப்
பாகதி பெறுவான் றிருமுன் பெய்தப்
பெற்றன னளியனேன் பற்றில னுயினு
மன்பிலே கொடியை யென்றருளா யல்லை
நின்பதம் வழங்குதி நிமலவென் றனர்க்கே
மருந்துண் வேட்கையன் மனமகிழ்ந் துண்ணினும்
அருந்துழி யொருவ னருவருப் புறீஇத்
தன்முகஞ் சுழித்துத் தலைநடுக் குற்றுக்
கண்ணீர் வீழ்த்துக் கலுழ்ந்தனன் மாந்தினும்
வாய்ப்புகு மாயினம் மருந்திரு வருக்குந்
தீப்பிணி மாற்றுத றிண்ணமே.............."

இனி, பிராட்டியை இங்ஙனம் இராவணன் தொட்டெடுத்தேகவும் அவைபற்றிய உட்பொருள்களை நிழற்சீதையைப் பற்றுதல் முதலியவற்றை இராமபிரானார்க்கு மிகமிக அடியாராகிய வான்மீகியார் கூறுதிருப்பவும், கந்தபுராணம் அவற்றை

எடுத்து விளக்கிப் பிராட்டிக்கு ஓர்வகை மாசும் எய்தாவகை போற்றிக் கூறியதன்மை' விசுவாமித்திரர் என்னும் துறவியாரை வசிட்டரே தம்வாயால் "நீர் பிரமவிருடிதான்" எனக்கூறிஒப்புக் கொண்டதோடொப்பத் திகழ்ந்து, என்போலியர் கழிபேரு வகைகொளும் பான்மைத்தாய்க் கவினுகின்றது.

இனி, இக்கட்டுரையின் தலைப்பில் இட்ட வினவின் விடை யாது? பழி யாருக்கு? எனின், தொட்டபழி பிராட்டிக்கில்லை, இராவணனுக்குத்தான் உண்டு என்னுமிது உங்கட்கு உள்ளங் கைத் தெளிநீராய்த் தெளியலாமன்றோ?

இதுவரையும் கூறியவாற்றால், இராவணன் பிராட்டியாரை இடதுகையாற் கூந்தலையும் வலது கையால் தொடைகளையும் பற்றி எடுத்துப்போனான் என்பதும், இவன் பிராட்டியைப் பற்றியது, புதன் தன் தாயாகிய உரோகிணியைப் பற்றுவது போலாம் என்பதும், பற்றியதும் காதலோடன்றிச் சினத் துடன்தான் என்பதும், கற்புடையர்ராதலில் தொடுதலே கூடா தென்பதும், தொட்டதனால், தான் வேருடன் அழிதக்க தீங் கினைத் தேடிக்கொண்டான் என்பதும், காதலுடன் பற்றியிருந் தால் அவன் பெற்ற வசைகளாலே அவனுக்கு அந்நொடியே சாவு நேர்ந்திருக்குமென்பதும், பெண் வாயிலாச் சாவு நிகழ வேண்டுமென்னும் வசைகளிருப்பதாலும், பிருகுத்துறவியாரின் வசைப்படி இராமபிரான் பிராட்டியைப் பிரிந்திருக்கவேண்டுத லாலும் இவன் பிராட்டியை எடுத்துப்போனான் என்பதும், இவை ஊழ்வினையாகமாறி வந்துறுத்தினவென்பதும், நிரம்பிய நோன்பினாற்றலால் தான் அவன் பிராட்டியைப்பற்றியதும் அழிந்திலன் என்பதும், இராவணப் பெருமாள் இவ்விராவண விராவணனிராவண மறுத்தல் தலைக்கீடாக இம்மன்பதை உல கைத் தீநெறிவிலக்கி, நன்னெறிசெலுத்தி உய்விக்கக் கோலினார் என்பதும், சனகர் முதலோர் வசையும் இதற்கடியாக அன்னார் ஆக்கிய சூழ்ச்சியேயென்பதும் *'போரடி நிலப்புறா விழுக்கா டா'க இவை யாவும் ஒருங்கே இவனுக்கழிவு காண்பதோர்

---

* போரடி நிலப்புறா விழுக்காடாவது, நெற்போர்தெழிக்கும் வயலிடத் தில் இரைகொள்ள வரும் புறாக்கள் விண்ணிலிருந்து தனித்தனி இறங்கி வாாமல், கும்பலாய் ஒரு சேரச் சரேலென இரங்குவனவாம். அதுபோல, இராவணனை அழித்தற்கடியாகப் பல்வேறு வசைகளும் (ஊழாக) ஒருங்கே ஒன்றுகூடி அவன் பிராட்டியைப் பற்றும்படியாகச் செய்து விட்டன என்பது கருத்து. இதனை வடநூலாற் 'களேகபோதநியாய' மென்பர். களம்=நெற்போர் தெழிக்குமிடம். கபோதம்=புறா. நியாயம்=விழுக்காடு.

பெற்றியவாயின என்பதும், கணவர் உறுதிமொழி காப்பதற் காகவே பிராட்டி தமயந்திபோற் சினந்து, இவனை எரிக்கவில்லை என்பதும், 'ராம' என்னும் மறைமொழியைப் பலமுறைநவின்ற தாலேயே பிராட்டியார்க்குத் தொட்டபழி கெட்டொழியவும் மீண்டும் தீப்புகல் அக்கற்பினை உலகோர்க்குக் காட்டவே என் பதும், தொட்டபழி இராவணனுக்குத்தான் உண்டு என்பதும், இராவணன்பற்றி எடுத்துப்போயது நிழற்சீதையே எனவும், வழிபடுதற்காகவே விராதன்போல் எடுத்தேகினான் எனவும் கந்தபுராணம் முதலிய நூன்மேற்கோள்கொண்டு உரைகண்டா ரால் அமைதி காட்டப்பட்டது என்பதும், இராமபிரானாலும் பிறராலும் பிராட்டியாரின் கற்பில் முதலில் ஐயங்கொள்ளப் பட்டுப்பின் அவர் எரிபுக்கு விளக்கிய பின் கற்புடையரே எனத் தெளியப்பட்டமையால், ஆன்றோரால் ஐங்கன்னியருள் ஒருவ ராகச்சேர்க்கப்பட்டார் என்பதும், கம்பநாட்டாழ்வார்தமிழரின் உளநிலை கருதியும், தாம் தொழும் கடவுளாய பிராட்டியைப் பிறனொருவன் தொட்டான் எனச் சொலக்கூசியுமே குடிலுடன் எடுத் தேகினான் எனத் திரித்தார் என்பதும் பிறவும் நன்கு விளங்குதல் கூடும்.

இனி, இவ்வாறுமேற்கோள்களுடன்பிராட்டிக்குத்தொட்ட பழியில்லையெனக்காட்டியும், பவபூதியார்கருத்துப்படி, இன்னும் அவரைப் பற்றி, உயிர்களைத் திருமால்பால் ஓம்படை செய்யும் ஒரு பெருங்கடவுள் அவரே என்பதை உன்னுமல், கெடுதலாகக் கூறப்புகுமவர் இருப்பரேல் அவர்க்கோர் எச்சரிக்கை.

பண்டு,நக்கீரனார்முக்கண்ணப்பெருமானைநோக்கி, 'நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என்று இறுமாப்புடன் கூறிப் பட்ட பாட்டை அவர் தம் நினைவுக்குக் கொண்டு வரு கின்றேன். அவர் பென்னம் பெரும் புலவராதலால், தமக்கு அப்பெருமானல் வந்தநோயைஅப்பெருமான்மேல் "கைலைபாதி காளத்திபாதி" என்னும் நூலைப்பாடித் தீர்த்துக்கொண்டார் என்பர். அப்படி அவர்போல அகப்பட்டுக்கொண்டு அல்லலுற வேண்டா. பிராட்டியின் அருளே பெரிதெனப் பேணுக. மற்றும், 'மண்ணின் மேலிருந்து கொண்டு பெண்ணோரம் சொல்லதே' என்ற வழக்கையும் ஓர்ந்துணர்க.

# தமிழ்ச்சொற்களின் விஞ்ஞான அமைப்பு

வித்துவான், திரு. ச. தருஸ் அந்தோணி அவர்கள்
St. Joseph's College, Trichinopoly.

மனிதன் மிலேச்சத்தனத்திலிருந்து நாகரிக நிலைக்குச் செல்லுகின்றான்; இதற்குத்தான் முன்னேற்றம் என்று பெயர்; இஃது அவனுடைய மேன்மேலும் எழுகின்ற உயர்வு உள்ளவில் பிணிக்கப்பட்டது. அவன் சிலகாலத்தில் குழப்பத்திலிருக்கும் பொழுது இவ்வுயர் உள்ளலே (Abstract Thinking) மீண்டும் அவன் வாழ்வில் வெற்றிவீரனாய் விளங்கச்செய்கிறது; எச்செயலுக்கும் ஒழுங்கு முறைத்திட்டம் வகுக்குமாறு மாற்றுகிறது. ஏன்? எதற்கு? என்ற கேள்விகளால், காரணம் காணவேண்டும் என்ற அவா வளர்ச்சியுறும்பொழுதே அவனுடைய மொழி, வளர்ச்சியையும் வளப்பத்தையும் அடைகிறது. தற்கால அறிவு வளர்ச்சிக்கு அடிப்படை, பெரும்பாலும் கேட்கத்தக்கத் திரண்ட எண்ணமேயாகும்; அவ்வெண்ணங்களே சொற்களாக வெளிப்பட்டு எழுத்துக்களாகப் பொறிக்கப்படுகின்றன. இவைகள், மக்களுள் தொடர்பு ஏற்படுவதற்கு உரிய வாயில்கள் என்று மாத்திரம் கூறிவிடலாகாது; நமது உருவிலா எண்ணங்களையும் தூக்கிச் சென்று உருளுகின்ற பைதாக்கள் என்றும் கூறலாம். எண்ணத்தின் பொருள்களே சொற்கள்; எனவே, ஒருபொது மொழியைப் பேசுகின்ற மக்களின் பொதுவான எண்ணங்கள், மேற்பரப்பில் காணக்கூடியன என்பது நன்குவிளங்கும். அன்றியும், எந்தமக்கள், எந்தமொழி பேசிவந்தார்களோ அந்த மொழியில் மக்களின் வாழ்க்கை வேறுபாடும் காலக்கூறுபாடும் சிலச் செம்மையும் எண்ணங்களும் அவைகளின் உருவும் எதிரொலிக்குந் திறத்தன. அவர்களின் அறிவுவளர்ச்சியைப் பெரும்பாலும் அவர்களுடைய பண்பட்ட மொழியிலிருந்து கணித்துக்கொள்ளலாம். ஆதலால் தனிவிலக்குற்ற மெல்லிய மொழியின் அமைப்பு, அம்மக்கள் உயர்வுறும் பாதையில்செல்லத் தக்க உறுதுணையாம் என்பதில் எட்டுணையும் ஐயம் இன்று.

எனவே மொழியியற்கலை (Philology) சரித்திரச்சான்றுகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது; அதன் தொழில், மக்கள், மாக்களின் நிலையிலிருந்து எவ்வாறு தங்களைக் காட்டுத்தனமான நிலைக்கு உயர்த்திக் கொண்டார்கள் என்றும், அதிலிருந்து எவ்வாறு

மிலேச்சத்திற்குச் சிறிது ஏற்றிக் கொண்டார்கள் என்றும், மிலேச்சத்திலிருந்து எவ்வாறு தங்களைப் படிப்படியாய் நாகரிகத்திற்கு உயர்த்திக்கொண்டார்கள் என்றும் தெளிவு படுத்துவதேயாகும். இந்தக் கடினமான மேலெழுச்சியின் படி, முதலில் எழுத்துச் சான்றுகளுக்கும் அகப்படாது மேன்மையுற்று விளங்குவது. மொழியியற் கலையின் துணைகொண்டு உலகத்திலுள்ள பல்வேறுமக்களின்தோற்றத்தையும், அவர்கள்பல்வேறு இடங்களுக்குச் சென்று குடியேறிப் பலமொழிகளைப்பேசிவந்த வரலாறுகளையும் அறிந்துகொள்ளுகின்றோம். மக்கள் தோற்றக் காலத்தில் ஒரு மொழியையே பேசிவந்தனர். அந்த மொழி சிதைவுற்றுப் பல மொழிகளாகத் தோன்றின. அந்த ஆதிமொழிஎதுஎன்பதைக்கூடியசீக்கிரத்தில் அறிஞர்ஆராய்ந்து வெளியிடுவார்களாக. எக்காலத்திலேனும் உண்மை விளங்கும்.

நிற்க, தற்காலச் சரித்திர சான்றுகளாலும் ஆராய்ச்சியாலும், உலகத்தில் படைப்புக்காலந்தொட்டுப் பலநாகரிகங்கள் தோன்றி அழிந்து விட்டன என்று கூறலாம். சிலநாகரிகங்கள் பற்பல விடங்களுக்குச்சென்று முதிர்ந்து பண்பட்டன. சில நாகரிகங்கள் இருந்தவாறே இருந்தன; சிலவிடங்களில் அவை அழிந்தன. ஆனால் பலவகை நாகரிகங்களைக் கொண்டு சென்ற மக்களில், ஒருசிலர் நாகரிக உச்சத்திலும் விஞ்ஞான உயர்விலும் சிறந்து விளங்கக் காரணம் என்ன? ஐரோப்பா முதலிய மேல் நாடுகள், நாளுக்கு நாள் அறிவிலும் ஆண்மையிலும் பெருகிக் கொண்டு செல்லக் கீழ்நாடுகள் கீழ் நிலையை ஏன் அடைந்தன? உடலுக்குத்தகுந்த தட்பவெப்பங்களும், விநோதமான இயற்கை வருவாயும், சாதகமான வாணிபப்பாதைகளும் முன்னேற்றத்திற்கு முற்றிலும் சிறப்பான காரணம் எனக்கூறினும், அவைகளுக்குப் பின் திரைமறைவிலிருக்கின்ற காரணம் ஒன்று உண்டு. அஃது அந்நாட்டின் மக்கள் ஒவ்வொருவரும் செய்யும் உலைவிலா முயற்சியே என்பது பகல்போல் விளங்கும். கல்வெட்டுகள் இம்மறைபொருளைக் காணலாகா; சரித்திர காலத்திற்கு முன்னேஉருவுள்ளமனிதன் நிற்கின்றான். இம்மனிதனைக் காண, மொழியியற்கலையே பெரிதும்துணைசெய்கின்றது. இந்த மனிதன் ஒருநாகரிக மனிதன்; அந்தமனிதன், மொழியேயாகும். இம்மனிதனைக் கற்களை யொத்திட்டுப் பார்த்தும்; உருவங்களை ஒத்திட்டுப்பார்த்தும் காணமுடியாது. ஆனால் மொழிவாயிலாக அவனுடைய பண்டைய உருவையும், அவனுடைய விஞ்ஞானக் கருவையும் அறிந்து கொள்ளலாம்.

மிகப் பழங்காலத்தில் மூன்றுவகை நாகரிகங்கள் இருந்தன.[1] அவை எகிப்திய நாகரிகம், சுமேரிய நாகரிகம், சிந்து நாகரிகம் என முத்திறத்தன. இவைகளுள் சிந்து நாகரிகம் திராவிடர்களுடையது. அவர்கள் மொழி திராவிடமொழிகள்; அவைகளில் சிறந்ததும், ஆதிதிராவிடமொழியின் (Proto-Dravidian) உண்மைப் பிரதிநிதியும் ஆனது தமிழ் ஒன்றேயாகும்.[2] தமிழ் மொழி இயற்கைமொழி ஆதலால், ஆதி திராவிடமொழி, தமிழ் மொழியே என்றும் கூறலாம். இம்மொழியின் சிறப்பு அளவிடற்பாலதல்ல.

எம்முன்னோர் பேசி வந்த தமிழ்ச்சொற்களை ஆராயப் புகுந்தால், அவர்களின் அறிவின் முதிர்ச்சி தெற்றெனவிளங்கும். அவர்கள் குறித்த எல்லாச் சொற்களும் பொருள்களைக் குறிப்பனவே.[3] அவர்கள் பொருள்களுக்குக் காரணம்பற்றியே பெயரிட்டனர். ஆனால், நாம் வெகு காலத்திற்குப் பின் தோன்றினோம் ஆதலாலும், காரணம் கருதிப் படைத்த சொற்களின் வரலாறு நம்மிடத்தில் இன்மையாலும் சொற்களின் காரணங்களைத் தெரிந்து கொள்ளச் சக்தியற்றவர்களா யிருக்கின்றோம். நமது முன்னோர் பலகலைகளை அறிந்திருந்தனர்; காலநுட்பங்களைப் பிறர் அறியச் செய்யாது அவைகள் அவர்களோடு அழிந்தன என்பதை உறுதியாய்க் கூறலாம்.

கடல் நீர் சூரியனுடைய வெப்பத்தால் நீராவியாகமாறி ஆகாயத்திற்குச் செல்லுகின்றது; ஆண்டுப் படர்ந்து இலங்கிக் கொண்டிருக்கின்றது. உயர்ந்த மலைகளிலுள்ள மரங்கள் வானுற ஓங்கி வளர்ந்திருக்கின்றன; குளிர்ந்தகாற்று அதன் மேற்பட்டவுடன் மழையாகப்பெய்கிறது. எனவே மேகத்தைநீர்சேர்த்து வைக்கின்ற வீடுஎன்றே கூறலாம். அது தற்காலம்நாம்அறிந்த உண்மை. இவ்வுண்மையைப் பல ஆயிர ஆண்டுகளுக்குமுன்னே எமது முன்னோர் அறிந்திருந்தார்கள்என்பது, அவர்கள் மேகத்திற்கு இட்ட பெயரிலிருந்து காணக்கிடக்கிறது. **முகில் என்றால்** மேகம் என்று பொருள்படும். முகில் என்னும் சொல்லும், அதைச்சேர்ந்த பூமொட்டுகளைக் குறிக்கும், **முகை, முகுள், முகுளம், மொக்குள்** என்னும் சொற்களும், கன்னடத்திலுள்ள **முகுள், மொக்கு, மொக்கே** என்னும் சொற்களும், துளுவிலுள்ள **முக்கே, முகே, மொகே** என்ற சொற்களும் சமஸ்கிருதத்திலிருந்து வந்தனவே என்று ஒருசாரர் கூறிவந்தனர். ஆனால்

1 Child: Light of the Most Ancient East. P. 3.
1 Dravidian Comparative Grammar. Caldwell: Introduction p.p.1, 39, 77.
2 தொல். சொல். 155. சூத். சைவசித்தாந்தப் பதிப்பு.

கிற்றல் என்பவர், அவைகள் திராவிட மொழிகளிலிருந்து சமஸ்கிருதத்திற்குக் கடன் கொடுக்கப்பட்டவைகள் என்று தடை விடைகளால் ஆய்ந்து கூறிவிட்டார்.[1] இவைகள் எல்லாம் 'முக்' என்னும் பகுதியிலிருந்து வந்தனவே. இதன் பொருள் 'மொட்டு' என்பதாகும்; அஃதாவது பூக்கள் அலர்வதற்கு முன்னுள்ள நிலை.

'முக்' என்பது முகத்தல், அள்ளுதல் என்ற பொருளும் கொண்டுள்ளது. எனவே, 'முகில்' என்னும் சொல்லில் முக்+இல் என்ற இரண்டு சொற்கள் தொடர்ந்திருக்கின்றன. இல் என்றால் வீடு, எனவே, 'நீரை முகந்து சேர்த்துவைத்திருக்கின்ற வீடு' என்ற பொருள் செறிந்த முகில் என்னும் சொல்லை அவர்கள் உபயோகித்து வந்தனர். இவ்வளவு பொருட்செறிவு மிகுந்த சொற்படைத்தோர், எவ்வாறு கலைகளைக் கற்றிருந்தனர் என்பது நாம் சொல்லாமலே விளங்கும்; அவர்களுடைய அறிவின் திறந்தான் என்னே!

ஆண், பெண், என்னும் சொற்கள், இன்னும் வியப்பையும் இறைவன் திருவுளக்கருத்தையும் வெளியிடும் திறத்தனவாகும். இச்சொற்கள், ஆள், பெள், என்னும் சொற்களிலிருந்துவந்தன. இவற்றின்பொருள் ஆட்சிசெய், விரும்பு என்பனவாகும். பின்னர், குறள், குறண், வள், வண், என்பனபோல ஆண், பெண் எனவாயிற்று. உயிர்ப்பொருள்களையும், உயிரில்லாப் பொருள்களையும் ஆண்டு நடத்தும் ஆற்றல் உடையவன் என்னும் கருத்தில் ஆள் (Person) என்றும், பின் ஆண் என்றும் வந்தது. இறைவன் படைப்புக் காலத்தில் மனிதனையுண்டாக்கி, அவனிடத்தில் கூறிய சொற்கள் இக்கருத்தை வலியுறுத்தும். பின்னும் அவர்; நம்முடைய சாயலாகவும், பாவனையாகவும் மனிதனைப் படைப்போமாக; இவன் சமுத்திர மச்சங்களையும், ஆகாயப் பறவைகளையும், மிருகங்களையும், பூவுலகமனைத்தையும், பூமியில் அசைவாகும் ஊர்வன யாவற்றையும் ஆளக்கடவான் என்றார்.'' 'பெள்'—விருப்பம்; எனவே விரும்பப்படும் குணத்தையுடைய பெண்ணுக்கு இப்பெயர் உண்டாயிற்று. நமது மூதாதையோர் உடல்நூல் வல்லுநரா யிருந்தனர் என்பது தடிமம் (ஜலதோஷம்) என்ற சொல்லால் போதரும். தடிமம்—வீக்கம். (Inflamation in the Mucous membrane) இவ்வாறு சொற்களை ஆராய்ந்துகொண்டு செல்வோமானால், எம் தமிழ்ச் சொற்களின் விஞ்ஞான அமைப்பு நன்கு விளங்கும்.

---

1 Kittel. The Dravidian Element in Sanskrit Dictionaries I A. I, 253.
ஆதியாகமம்: 1 அதி—26, 28.

# வள்வல் கண்டீரக்கோப் பெருநள்ளி

(ஒரு சிறு நாடகம்)

சிவ. குப்புசாமி

தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 15, மலர் 8, பக்கம் 319.)

## இயல்-உ—காட்சி-உ

உறுப்பினர் :—தேவி-பொன்மொழி

இடம் :—தோட்டிமலைப்புறத்துற்ற போர்க்களம்

பொழுது :—அந்திமாலைப்போது

[நங்கை-பொன்மொழித்தேவி, தன் இளமதிவாணன் நெஞ்சிற் புண்பட்டு மாண்டமை கண்டு மகிழ்ந்து, தன் கொழுநன் சென்றவிடங் குறித்தேகல்]

தேவி-பொன்மொழி :—[அவிழ்ந்த கூந்தல், மருண்டநோக்கு, சினமுற்ற தோற்றம், இவை பெற்று] ஆஃஆ! இளமதி! நின்னை, ஓர் உயர்குடி மறவன் என்றன்றோ எண்ணினேன்? இம்மாநில வாழ்வே மாண்புடைத்தெனக் கருதிப் போரிற் புறமுதுகிடும் நீயோ, என்மகன்? அல்லற்பட்டுழலும் இச்சிற்றுயிரினும் நாட்டின் தனிமாண்பைக் காத்தற்பொருட்டுப் போரிற்சாவும் பேருயிரைப் பெரிதெனக் கொள்ளாத புழுத்தலை நாயினே! யாண்டு சென்றாய்? என் கண்ணிற்புலனாகாது எவ்விடத்தடா மறைந்துள்ளாய்? என்னே, இஞ்ஞாலத்தினியல்பு! [திகைப் புற்று விழித்தல்]

அன்று....ஆம், அன்று....அவ்வாறு கருதுவது தவறுதான். ஓடிவந்தபோது மாண்டனன் என்றன்றோ கூறினரென நினைவு வருகின்றது. ஆம், ஆம் (பெருமூச்சுவிடுதல்) அறிவிலாமகனே! ஆண்மையற்ற அச்சம் நிறைந்தவனே! அடல் ஏறனைய நின் தந்தையின் திண்மை நிலை யெங்கே? கோழைத்தனமிக்க இளமதி! நின்னூ நொய்மைநிலை யெங்கே? ஆ, கெட்டேன்! இளையவனாயினும் இனைவு நிலை காட்டாது அடு போராற்ற

அவாவுகின்றஇவன், எம் மறவர்குல விளக்காவான் என நினைந்தன்றோ அமர்க்களம் அனுப்பினேன். விதையொன்றுபோட முளைவேறு தோன்றியதே. என்னே, மக்கள்தம் மியல்பு! [நாநடுங்க] இளமதி! அடுகளஞ்சென்றபோது சலிப்பின்றி விளங்கிய நின்பால், இவ்வச்சம் எவ்வாறடா தோன்றிற்று? முன் வைத்த காலைப் பின்னெடுக்கலாமா? அந்தோ! [மிடறுவிம்ம] எமது மரபின் சிறப்பு இவ்வாறோ இவனு லழிவுற வேண்டும்? [திகைத்து, விழித்து, நெட்டுயிர்த்தல்]

நன்று! எதனையும் ஆய்ந்து செய்வதே சால்புடைத்து. ஆதரவற்ற மொழியை எண்ணி ஏங்கி மடிதல் முறையன்று தான்.... சென்று காண்பேன் [நகர்தல்]

இதோ, போர்க்களப் பிணக்குவியல்கள்! என் மகனும் ஈண்டுதான் இறந்துகிடக்கவேண்டும். [பற்களை நெறித்து] பகைவர்தம் படைக்கலன் அவனது முதுகைத் துளையிட, அதனாற் புண்பட்டு மாய்ந்துகிடப்பனேல், ஆம். அவனால் எம்மறவர் மரபுக்குற்ற இப்பழியைப்போக்க, அவன் உண்டு வளர்வதற்குதவிய, என் பாலூறு மார்பைச் சிதைத்தெறிந்து, கழுவாய் செய்வேன். [தன்றனயனைத் தேடுதல்]

என்மகன், என்மகன் !! [வாரி எடுத்து நோக்கல்] என்செல்வ மகன், ஆ! இவன் மார்பன்றோ புண்பட்டுள்ளது! மகிழ்ந்தேன்; உய்ந்தேன்; எம்மரபு ஓங்கிற்று; எங்கள் குடி சிறந்தது. இனி எம் நாடு உயர்வுபெறும்; எம் பகைவரும் ஒருங்கே மாய்வர்; இஃதுண்மை, ஐயமின்று. பிழைபெற்ற மொழிகேட்ட யானே அறிவிலேன். [இரக்கக்குரலுடன்] பேதை மதியால் என்னென்னவோ வெல்லாங் கருதினனே, இத்தீவினையாட்டி? 'எம்மாண்புறு மறவர்குடி எந்நாளுந் தன்னிலையிற் பிரியாது' என்றவுண்மையினை இன்று கண்டேன். [விண்ணை உற்று நோக்குதல்]

ஏ! கொடுங் கூற்றமே! மண்ணிற் பிறந்தார் எவரும் இறப்பர் என்பது முறைதான். அதற்கும் ஒரு வரம்பில்லையா? நாட்டின் பெருமைக்குத் தோன்றிய ஒருவனை, ஓரிளமகவை, நீ நாடலாமா? எய்தவனிருக்க அம்பை நோவதாலாவதென்? [நாநடுங்க]

ஆ! கண்ணே, என் அரும்பெறல் மணியே! பால்மணம் அறாத நின்னையும் அக் கொடியவர் கொல்லத் துணிந்தனரே! என் செல்வக் கொழுந்தே! எமது குடிநிலை விளக்குமுற

நீயாகிலும்உயிர் வாழ்வாய் என்றெண்ணிய இத்தீவினையாட்டியின் நெஞ்சம் புண்பட்டதே. ஐயகோ! [மிடறுவிம்ம] என் இனிய மகனே 'அம்மா, அம்மா! நான் ஆண்மையுள்ளவன்: வலிமையுடையேன்: போர் செய்வேன்: புலிக்குப்பிறந்த நான் பூனையாவனோ?', என்றெல்லாம் என்னிடம் நீ மொழிந்தாயே. இப்போது உன்னை நான் போர்க்களத்தே கண்டு, அணைத்தெடுத்து அலறியும் நீ புரிந்த போரைக்குறித்து ஒன்றுங்கூறுது, ஊமையனுயிருத்தல் உனக்கேற்குமோ? என் இளமதி! நான் உன் அன்னை ஆயிற்றே. என்னைப்பார்த்து நின் கொஞ்சுதல் மிக்க செஞ்சொன்மொழியால் ஒரு சொல் கூறுயோ? எழுதவியலா என் அழகிய ஓவியமே! குஞ்சியில் மலரணிந்து, கொட்டைக் கரையுடைய பட்டுடை யுடுத்தி, கொடுமைநிறைந்த இப்படைக்களத்தே போர் செய்ய நாடிய நீ, ஈரமற்ற நெஞ்சத்தவர் வேலால் மார்பிற் புண்பட்டு மாண்டபோது, என் அன்பின் நிழலே! நின் உள்ளத்தில் என்னென்ன கருதினையோ? நீ என்னை நினைக்கவில்லை? என் ஆசை மகனே! நான் என் சொல்லினும் வாய்பேசாதிருப்பது நினக் கழகல்லவே. அந்தோ, ஆ, கடவுளே!

க. முன்னாள்மடிந்த என்ஐதுயரம் முடிவதன்முன்ன ரந்தோ!
பின்னாள்என்னுவி கொழுநன்பிரிய பிழையான்என்செய்த னுணரேன்
சின்னாள்முன்தோன்றித் தெருவிற்பயின்ற சிறுபிள்ளை எந்தன் மணியை
இன்னேபிரித்த இயமன்றனெளிமை என்னென்றியம்பி நைவேன்.

உ. வீறுற்றுயர்ந்த குடியென்றுமோங்க வினையாற்றிவீழ்ந்த மகனே
சேறுற்றுயர்ந்த மலராள்தம் செல்வச் சேமிப்பையென்று முற்றே
ஆறுற்றயர்ந்த வளநாடுபோல அழகோடு கல்வி யுற்றே
ஏறுற்றுயர்ந்த எழில்தோள்கள் பெற்றும் எய்தும்பயனுமிலையே

ரு. எங்காதலன்றன் திருமார்பிலேறி எழிலோடு நின்ற மகனே
தங்காது போரிற் சமர் செய்யவந்து தனியே நீ எங்கு சென்றாய்?
துங்கா எனது துரையே மிகுந்த சுடர்வீசுகின்ற மணியே!
வெங்காலன் கொள்ள விழையாமலென்னை விரைவாகச் சென்றதழகோ

[வியப்புமேலிட விண்ணிடை நிமிர்ந்து] ஆ! என்னே? என் காதற் செல்வமா! செல்வத் துரையே, இளமதிவாண! இதுகாறும் நீ என் அருமைத் தன்னையுடனேவுள்ளாய்? என் அண்ணல்! என் நிலையைத் தாங்கள் இன்று காண்கின்றீர்களா? என்னினின்றும் பிரிந்துவர என் ஆருயிர்க் காதலரைத் தாங்கள்

ஏன் அழைத்தீர்கள்? ஆ! நாதா, [எழுந்து விண் நோக்குதல்] தங்கள்பிரிவைத் தாங்கும் வலிமை எனக்கின்று. என் துணைவா! எனதாருயிர் நிலையே! என்னைத் தாங்கள் நோக்கியும் யான் உங்களை அடையாதிருப்பனோ? எனக்கிங்கு என்ன வேலை? என் பெரும! இதோ வருகின்றேன்: அன்புடன் என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்! என்னுயிரே, என்னைஏற்றுக் கொள்க!! [மெலிந்த குரலில் சோர்ந்து அமர்தல்] என்னை ஏற்றுக்கொள்க!!! [நிலமிசைச் சாய்தல்]

காட்சி முடிவு.

## இயல்-உ—காட்சி-ரூ

உறுப்பினர்:— வள்ளல் கண்டீரக் கோப்பெருநள்ளி; மணிமுடியார்; பெருமக்கள் தலைவன்; மற்றுமுள்ளார்.

இடம்:—தோட்டிவரை நாட்டு முதனகர்.

பொழுது:—முற்பகல்.

[வள்ளல் கண்டீரக்கோப் பெருநள்ளி, பொன்மொழி நங்கைக்கு நடுகல் விழாவியற்ற நாடல்]

கண்டீரக் கோப்பெருநள்ளி:—

"வாழிசெந்தமிழ் வாழிபைந்தமிழ் வாழிதண்டமிழ் நாடு
வாழிசெம்பொரு ளூறுநாவளர் வாணருறை தமிழ்நாடு
வாழிகற்பணி காதன்மங்கையர் வாள்வலிசேர் தமிழ்நாடு
வாழிநல்லறம் வளமுறநல்கி வான்தமிழ்காத்த எம்நாடு"

[வணங்கி, அரியணையிலிருக்க, யாவரும் அமர்தல்]

அன்பார்ந்த குடிமக்களே! ஆன்றோர்களே! இன்பநிலையுற்று வாழும் பெருமக்களே! நாம் எல்லோரும் இறையனருளால் இன்றுபோல் என்றும் இனிதுவாழ்வோமாக. நாம் அனைவரும்

இதுபோது, ஒருபெரிய கடும்புயலால் முதலிற் கலக்குண்டு, நெடுந்திரை யெழுப்பி, பேரோலமுற்று, மிகுவெள்ளம்பெருக்கிப் பின்னர் தன்னிலையுற்று அமைதிபெற்றஓர் ஆழிபோலாயினோம். முன் திங்களின் இற்றைய நாளில் நாம் ஓர் ஆய்வுக்குட்பட்டிருந்தோம். நமதுநகர், மாற்றலர்வருகையால் அல்லோலகல்லோலங் கொண்டு அவதியுற்று வருந்திற்று. இவ்வாறு நமக்கு விளைந்த எதிர்பாரா இவ்விடர், வீணே தோன்றியதெனக் கருத இடமின்று, இவ்விடர் நமக்குற்றதால், நாம் பெரும்பொருளையிழந்தோம்; பெறற்கரிய நெஞ்சாண்மை மிக்க மறவர்களைப் பிரிந்தோம்; நம்நாட்டின் வருங்கால அருமருந்தன்ன இளைஞர்களை நீங்கினோம்; எனினும், நம்பகைஞர் நம்மீது திடீரெனப்பாய்ந்து, எத்தகைய முன் அறிவிப்புமற்று வாழ்ந்த நம்மை, நசுக்கக் கருதியஞான்று, நாம் அனைவரும் ஒருணர்ச்சிபெற்று, ஒற்றுமை குலையாது, மெய்வருத்தம் பாராது, கண் துயில்பெறாது, செயன் முடிப்பையே கருதிநின்று, வெற்றிகொண்ட நம்பால், உற்ற துணையாயிருந்ததெதுவோ, அப்பொருளே, அன்புமேவிய குடிமக்களாய உங்கட்கும்முறையுறக்காக்கும்நும்புரவலனாயஎனக்குமுள்ள நெருங்கிய தொடர்பின் திண்மையை உலகோருணர, இவ்வாறு நம்மை யாட்டுவித்ததென்பேன். ஏனெனில், இவ்வெற்றியால், நம் எதிலார் நாம் கொண்டுள்ள நாட்டுரிமை வேட்கையை நன்குணர்ந்தனர். இனிமேல் நாம் எதற்கும் அஞ்ச வேண்டுவதின்று; நம்பால் எத்துயரும் அணுகா; என்றும் நமக்கு அவனருளே உண்டு.

**மணிமுடியார்:**—தோட்டிநாடாளும் தோன்றலே! வணக்கம். பிறநாட்டவர்க்கு எத்தீங்குங் கருதாத நம்மைப் பகைத்தவர், எவ்வாறு வாகையணிய இயலும்? நாம் காட்டிய நட்பை மறந்து, நம்மோடு ஒன்றுபட்டு வாழும் நெறியுணராது, நன்றி கொன்ற மக்கள் பெறும் பாட்டை யடைந்த நம்மாற்றலரோடு, நாம் சீறிச் சமர் செய்தபோது, நம் நாட்டின்புகழ், குன்றின்மேலிட்ட கொழுஞ்சுடர் விளக்கென மிளிருமாறு ஓரருஞ்செயல்நிகழ்ந்தது. அச்செயல்ஒன்றே நாம்பட்ட பெருந்துயர்க்குற்ற ஓர் இணையற்ற பரிசில் ஆகுமெனக் கருதுகின்றேன்.

**கண்டீரக்கோப் பெருநள்ளி :**— மணிமுடியாரே! அஃதின்னதென யான் ஒருவாறுணர்கின்றேன். யான் அதனைப் போர் முடிந்தஅப்பொழுதே நம்ஒற்றர் வழியுணர்ந்தேன். இந்நன்னாள் அத்தகையநிகழ்ச்சி கூறப்படுவதற்கு மிகவும் பொருத்தமுளதே

யாகும். ஆதலால் நீவிர் அதனை ஈண்டுள்ளார் அனைவரும் தெளிவுற அறியுமாறு, கூறுமின்.

**மணிமுடியார்:**—எம்பெருமு! நமது நாட்டின் சிறப்புக் குற்றன பல இருப்பினும் இற்றைப்போது யான் கூறப்புகும் செய்திக்கு அவை ஒப்பாகா. நம்நகரின் தொன்மை பெற்ற மறவர் குடியினனாகிய மாவீரவில்லி அவனது நெருங்கிய உறவினனாய மாவேலன் என்பான், களிற்றுப்போரில் ஒரு யானையால் குத்துண்டிறந்த மறுநாளே, குதிரைப்படை நடுவில் ஊழ்வலியாற் கொலையுற்று மாண்டான்; அந்தோ! இவன் பிரிவால் நாம் ஆண்மை மிக்க ஓர் உயரிய மறவர் மணியை இழந்தவராயினோம். அவனது சிறந்த உயிர், ஆண்டவன் திருவடி நீழலில் என்றும் இன்புற்று அமர்வதாகுக.

**கண்டீரக்கோப் பெருநள்ளி:**— குடிமக்களே! அன்று விண்ணடு மேவிய மாவீரவில்லியைப் பற்றி மற்றொரு செய்தியுமுண்டு. அஃதாவது, போர் தொடங்குமுதனாளிரவினில் நம் படைஞர் போல மாறுவேடந்தாங்கி நம் பாடியுட்போந்த, இரு ஒற்றர்களை எவ்வாறோ வுணர்ந்து, அவர்களை அவன் சிறைப்பற்றி எம்முன் கொண்டுவந்தனன். அவ்வொற்றருள் ஒருவன் தன் வரலாறுணர்த்துங்கால் எத்துணையோ பலவடிவுகொண்டு இதுகாறும் வெற்றிபெற்ற அவன் செயல், நம் மாவீரவில்லிபால் தோல்வியுற்றமைக்கு வருந்தியபோது, அவர்கள் உடல் நிழலிலேயே ஒதுங்கியிருந்து, வேற்றொலி எழுப்பாதுபின் தொடர்ந்து அவர்களைக்கைப்பற்றிய முறையைக்கூறினன். அஃது எமக்குப் பெரிதும் வியப்பினையளித்தது. அத்தகைய ஆண்மையுடையவனின் பிரிவினால், நம் நாடு உண்மையாக ஒரு பெரிய வீரனை இழந்தது. பின்னர்மேலே கூறுக.

**மணிமுடியார்:**—வீரவில்லியின் மனைவி, மறவர்குலக்கற்பின் கொழுந்தாவாள்; அவள் தன் கொழுநன் மாண்டமைக்கு வருந்தினளாயினும், நெஞ்சுடைந்து அன்றேசாகவில்லை. அவள் குடிக்குற்ற ஒரே மகனை மிக்க இளைஞன் என்றும் கருதாது, போர்ப்பறைகேட்ட அப்பொழுதே, நாட்டுமீது கொண்ட பேரன்பினால் தன் சின்னஞ்சிறு பிள்ளையை யழைத்து, மணங்கமழ் நெய்யை அவன்றன் நீண்ட மயிரிற்றடவி, அதனை வாரி முடித்து, மலர்களால் அழகு செய்து, பட்டாடை யுடுத்தி, வில்லும் வேலும் அவனிடம் தந்து, உச்சிமோந்து, முத்தமிட்டு, வாழ்த்தி, உள்ளங் கலங்காது, உலகத்தவர் வியக்கப் போர்க்களஞ் செலுத்தினள்.

**கண்டீரக்கோப் பெருநள்ளி** :—மணிமுடிப்புலவரீர்! என்னே அவள்தன் துணிபு! மறக்கற்பமைந்த மங்கையே அவளாவாள்.

**மணிமுடியார்** :—பின்னர், போர்முனையினின்றும் அவள் மகன் ஆற்றாது புறமுதுகிட்டோடினான் என எவரோ கூறக் கேட்டு அஃது உண்மையன்றென வோராது, சினம் பொங்க செருக்களஞ் சென்று, ஆண்டு நெஞ்சிற் புண்பொருந்த மாண்டு கிடந்த தன் மகனைக்கண்டு, அவனை ஈன்ற ஞான்றினும் பெரிதும் மகிழ்வாளாயினாள். பிறகு அப்போர்க்களத்தினின்றே மிகுந்த அன்புடன் அவள் உயிர்த்தோழனாகும் மாவீரவில்லி மேவிய நாட்டை நோக்கிச் சென்றாள். பெரும! இவளது செயல் நம் நாட்டிற்கு மிகுந்த பெருமையை யளிக்கவில்லையா?

**கண்டீரக்கோப் பெருநள்ளி** :—புலவர்பெரும! இதிலென்னை, நீவிர்பெற்ற ஐயம்? அவள் செயல் நம் நாட்டின் சிறப்பைப் பத்துமடங்கு உயர்த்தியது உண்மையே. இத்தகைய வீர நங்கையர் என்றும் எங்கும் எக்காலத்தும் தோன்றார்; பல நூற்றாண்டுகட் கொருமுறையே இந்நிலத்திற் காணப்பெறுவர். ஆதலால் நம் நாட்டவர் அவளை என்றும் மறவாதிருக்குமாறு ஓர் அரிய ஆக்கம் அவட்கு அமைக்கவேண்டும். இதுவே என் எண்ணம்: இவ்வாறு அவள் பெயர் என்றும் நிலவுமாறு செய்வதே நாம் அவட்குப்புரியும் கைம்மாறாகும்.

**மணிமுடியார்** :—நன்றுபெரும! தங்கள் எண்ணம் நிறைவேறுக. இதுபற்றி, நம் பெருமக்களின் கருத்தியாதென அறிவதும் ஏற்புடைத்தாகுமெனக் கருதுகின்றேன்.

**பெருமக்கள் தலைவன்** :—மன்னுயிர் புரக்கு மன்ன! எம் தோட்டி மலையின் தலைவ! அன்புடைமையோடிருந்து, என்பு நெக்குருகப் புகழும் மொழியுடையராய் மண்படிந்து தொழூஉம் எங்கள் வணக்கம், செம்மலர் மேவிய திருக்கழல்கள் புனைந்த தேவரீர் திருவடிகட்கு அணிசெய்வதாகுக. பெரும! நம் நகர்க்குரிய மங்கையாகும், இவ் வீரமாநங்கையே இனி எம்மவர்க்குற்ற கடவுளாவள். இப்பொன்மொழி நங்கை, மாசிலாக் குலத்து வந்தாள்; மன்னுபுகழ்க் குரியாள்; தேசுடைக் கற்பின் கொழுந்தாய்த் தேர்வுறு தெய்வமானாள். மேலும், நம்மரபு வாழையடி வாழையென பல நலங்களானும் விளக்கம் பெற்று, எல்லாவுரிமைகளோடும் நிலைத்து வாழ்வதற்குத் துணை நிற்கும் எம் ஒப்பற்ற கற்புடைத் தெய்வமாகவும் வாய்த்துள்ளாள்; நம்

நாட்டுத் தமிழ் நலப்பெண்களின் தலைமை குன்றாக் கற்பமை வாழ்க்கையின் நற்றவக் கொழு கொம்பாய் மிளர்கின்றாள். ஆதலால், அண்ணலே! இவ்வீரமாநங்கையை யாங்கள், இந்நகரத் தவர்தம் குலக் கடவுளாகக்கொண்டு வழிவழியாகத் தொண் டாற்றி மகிழ்ந்து வாழ்வதற்காய பல கடமைகளையும் இன்னே தங்களாணையின் கீழ்நின்று ஆற்றுவேம், என்றபணிவு மிக்க மொழியைத் தேவரீர் திருமுன் குறிக்கின்றேம்.

**கண்டீரக்கோப் பெருநள்ளி:**—புலவர் பெரும! மாபெரு மக்களே! உங்கள் உடன்பாடறிந்து மகிழ்ந்தேம். நங்கைவிழா இனி நன்கு நிறைவேறும். எம்தேவி கோப்பெரும்பெண்டும் இன்னே நம் பொன்மொழிநங்கைக்கு நல்விழா எடுக்கச் செம் பொன் பணிகள் பல தந்து, எம்மை ஊக்கி வருகின்றதையும் இவண் குறிப்பிடுகின்றேன்.

**பெருமக்கள் தலைவன்:**—அண்ணலே! நம் ஊர்ப்பொது மன்றத்தண்மையில், இக்கற்புடை நங்கைக்கு ஒரு கோட்டம் வகுத்து வழிபாடுசெய்ய வாய்ப்புளதேல், நமது நகர்ப் பெண் மக்கள் அனைவரும் இக்கற்புடை நங்கையின் வரலாறுணர்ந்து, தம் வாழ்க்கை மேனிலையை யெய்துவரென்பது திண்ணம்.

**கண்டீரக்கோப் பெருநள்ளி:**—நன்று முதல்வ, அவ்வாறே செய்வோம். நாம், நம் பெருங்கணிக் கம்மியரைக்கொண்டு, நூல் வரம்புகோடாது கற்புக்கணியாட்கு கவினுறுகோட்டம்வகுத்து, கைவினை முற்றிய கடவுட் படிமம் நிறுவி, வித்தகரியற்றிய விளங்கியகோலத்து முற்றிழைநன்கலம் முழுதும்பூட்டி, பூப்பலி செய்து, காப்புக்கடை நிறுத்தி, விழாவும் வேள்வியும் விளக்க முறத்தோற்றி, கடவுண்மங்கலஞ் செய்ய இன்றே முயல்வேம், ஆதலால், அன்பரீர்! தேவி திருப்பணி இடையீடின்றி நடை பெற, யாவரும் இன்னே முயலுமின்.

**பெருமக்கள் தலைவன்:**—அவ்வாறே பெரும! எம்பெருமான் கண்டீரக்கோப் பெருநள்ளி, வாழ்க! (**யாவரும்:**—வாழ்கவே!)

காட்சி ரு முடிவு.

உ

# கலைச்சொற்கள்

திரு. T. S. வேலாயுதம்பிள்ளை அவர்கள், தலைமை ஆசிரியர், உரத்தநாடு

## பொது அறிவியல்

பள்ளி முடிவுத்தேர்வுக்கு (S. S. L. C. Examination) இப்பாடப்பகுதி சில ஆண்டுகளாக ஏற்படுத்தப்பட்டிருந்தும் இதற்கான தமிழ்ச் சொற்கள் இதுவரை வெளிவராதிருந்தது ஒரு பெருங் குறையேயாகும். எனினும் தமிழ்ப்பாட புத்தகங்கள் பல வெளிவந்திருப்பது போற்றத் தகுந்ததே. ஆனால்அவற்றிலுள்ள கலைச்சொற்கள் அறிவியல் முறைப்படி ஆக்கப்படாதிருப்பது வருந்தத் தக்கதேயாகும். இக்குறையை நீக்கப் பல பாட புத்தகங்களையும் ஆராய்ந்து அவற்றில் பயன் படுத்தப் பட்டிருக்கிற சொற்களை விடாது தொகுத்துத் தக்கவாறு தமிழ்ப்படுத்தி இத்துடன் வெளியிடப்பட்டிருக்கின்றேன். இதிலுள்ள குறைகளைக் காண்பித்து இவற்றினும் தகுதி வாய்ந்த சொற்களைத் தெரிவிப்பின் நன்றியுடன் ஏற்று திருத்தி வெளியிடப்படும். இதில் உயர்திரு விபுலாநந்த அடிகளார் அருளுடன் இயற்றிய கரிமவேதிநூல் (Organic Chemistry) சொற்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

Abstract Science-அகத்தறிவியல்
Acetate-புளிகை
Acetabulum-தொடையென்புக்குழி
Acetal-dehyde-புளிகநறவி
Acetone-புளிகக்கரி
Acid, Amino-நவனிக்காடி
,, Palmitic-பனையக்காடி
,, Stearic-மெழுகக்காடி
Aerated Water-குமிழிநீர்
Air bladders-காற்றுஉப்புபை
Air-gun-வாயுத்துப்பாக்கி
Air-turbine-காற்றுசெலுத்துருளை
Alcohol, Absolute-தனிவெறியை
,, Deethyle-ஈரவ்வயில் [வெறியை
,, Ethyle-இவ்வயில்வெறியை
Alcohol Primary-முதல்வெறியை
,, Secondary-வழிவெறியை
Alcoloids-காரப்போலிகள்
Aliphatic Substances-திணச்சரக்குகள்
Allylene-மூவிலினி
Alveoli-காவடங்கள்
Ameter-மின்னோட்டளவி
Amides-நவனைகள்
Amines-நவனிகள்
Amine Methyle-அவ்வயில்நவனி
,, Dimethyle-ஈரவ்வயில்நவனி
,, Trimethyle-மூவவ்வயில் [நவனி
Ammeter-மின்னோட்டமானி
Amye-ஐயயில்
Amylene-ஐயிலினி

Analytic Process-பகுமுறை
Ancestor-முந்தையோர்
Anhydride-அன்னீரதை
Anemometer-(காற்று) விசையளவி
Anthropology-மக்கள்வழி நூல்
Antiquary-பழம்பொருட்கலைஞன்
Antitoxin-நச்சுமுறி
Aphis-பாற்பூச்சி
Ape-வாலில்லாக்குரங்கு
Aquarium-நீர்வாழிச்சாலை
Aquatic-நீர்வாழி
Archaeology-பழம்பதிவியல்
Architect-சிற்பி
Arc-light-வில்விளக்கு
Armoury-படைக்கலசாலை
AromaticSubstances-மணச்சரக்குகள்
Arrange-வரிசைப்படுத்து
Arrangement-வரிசைப்பாடு, ஏற்பாடு
Articulate(*a*)-விளங்கப்பேசு,
Ash-tree-அசோகமரம் [மூட்டிணை(*n*)
Baking-காற்று வறப்பு
Ballast-நிலைகொடுப்பான்
Do நிலைகொடுக்கிற அறை
Ballistic Balance-வீழ்விசையளவி
Balloon-புகைக்கூண்டு
Band-கூட்டியம்; ஆக்கை
Barb-இறகுக்குச்சு
Barbet-ஊமைக்கோட்டான்
Battery-light-கைமின்னி
Bichromate Cell-குருமியக்கலம்
Bicycle-ஈருருளி
Benzene-எரிநீர்
Binding-இணைக்கிற
Binocular Vision-இருகண்பார்வை
Biplane-இருதட்டூர்தி
Black lead pencil-காரீயஎழுதி
Bladder-உப்புபை
Blocktackle-கயிறுடைக்கப்பிகள்
Blue-joy-கொட்டுக்கிளி
Blotting paper-ஒற்றுத்தாள்
Boyhood-சிறார்ப்பருவம்

Brahminykite கருடன்
Branch-கிளை
Brand new-முத்திரைப்புது
Bridge (Fiddle)-குதிரை
Bright fortnight-ஒளிப்பக்கம்,
[ஒளிப்பன்னான்கிரா
Broad chamber-இனம் பெருகறை
Brown paper-சாணித்தாள்
Brush-துடைப்பான், தூரிகை
Bul-bul-கொண்டலாத்தி
Burner-எரிப்பான்
Burst-வெடி
Bursting-வெடித்தல்
Butane-நாலிணி
Butile-நாலயில்
Butylene-நாலயிலினி
Cake-அடை
Canning-புட்டியிலடைத்தல்
Cauterise-தீய்
Carbon-tetra chloride-கரிநாற்
Card board-தாள்ப்பலகை [பாசிதை
Cell, Bunsen-புன்சன் கலம்
,, Daniel-தானியல் கலம்
Cellulose-மாவி
Cement-பற்றுசு
Charge-குற்றச்சாட்டு, சுமத்து
Chicory-சிக்கரி (கொட்டை)
Child-hood-குழவிப்பருவம்
Chlorination-பாசிகக்கலப்பு
Cinema-இயங்குபடம்
Cinematograph-படவியக்கி
Circuit-சுற்று, சுற்றுவழி
Classify-வகைப்படுத்து
Coal gas-கரி வாயு
,, Hard-வன்கரி
,, Soft-மென்கரி
Cochineal-சப்பாத்திப்பூச்சி
Code-குறிமுறை
Coherer-மின்அலை பிடிப்பான்,
[அலையிசைப்பான்
Coke-கரியடை, கரிக்கல்

Cold-storage-குளிர்சேமியம்
Colour (Aerated water) திறநீர்
Comparative-ஒப்புநோக்கும்
Common knowledge-பொதுத்தெரிவு
Common Sense-பொது அறிவு
Complex-கலப்பான
Compressed air chamber-அமுக்கக் [காற்றறை
Concrete-சுண்ணச்சல்லி
Concrete-science-புறத்தறிவியல்
Concussion instruments-தாளக் [கருவிகள்
Conduit-செலுத்துகுழாய்
Connection-இணைப்பு, தொடர்பு
Consciousness-அறிநிலை
Conscience-மனச்சாட்சி
Constellation-இராசி
Converter (steel) -மாற்றுலை
Cooker-சமைப்பான்
Fireless-தீயிலாச் சமைப்பான்
Coot-நீர்க்கோழி
Copying press-படியெடு அமுக்கி
Coracias indica-பால்குருவி, கட்டுக் [காடை
Cord-வடம்
Cormorant-நீர்க்காகம்
Corona-கொளுந்து மண்டலம்
Cowpox-கோமாரி
Crane-தூக்குபொறி, ஓந்தி
Cricket ball-மட்டைப் பந்து
Croton-கவின்செடி
Crotulylene-நாலிலினி
Crow, house-மணியங்காக்கை
,, Jungle-அண்டங்காக்கை
Pheasant-செம்பகம், செம்போத்து, [சகோரம்
Crude oil-கசட்டு நெய்
Crush (Drink) -பிழிநீர்
Cuckoo-புழுப்பொறுக்கி
Cuddappahslab-கடப்பைக்கல்
Cud-அசைக்கோளம்
Cup board-கிண்ணத்தட்டு

Curlew-கோட்டான்
Current electricity-ஓடுமின்சாரம்
Cycle-உருளி
Dab chick-முக்குளிப்பான்
Dark fortnight-இருட்பக்கம், இருட் [பன்னுன்கிரா
Dealwood-கள்ளிமரம்
Deduce-பகுத்துக்காண்
Deductive Method-பகுத்தாய்முறை
Deltoids-உயர்புயத்தசை
Dengue fever-மூட்டு (வலிச்) சுரம்
Depot-பண்டசாலை
Dial-முகவட்டு
Device-திறமை (யான) ஏற்பாடு
Dichromatecell-குருமியக்கலம்
Dictaphone-திருப்பிப்பேசி
Dilation-பெருக்சம்
Diphtheria-சளித்தோல்வேக்காடு
Discharge-விடுப்பு
Diving bell-முழுகுமணி
Double touch-இருகாந்தத்தேய்ப்பு
Drier (N) உலர்வி
Driver-ஓட்டி, பாகன்
Dropbottle-சொட்டுப்புட்டி
Drycell-வரட்டுக்கலம்
Dry cleaning-வரட்டுச்சலவை
Duration-இடைப்போழ்து
Dynamo-திறனுக்கி
Ebonite-கற்பயின்
Eccentric-புறமைய வட்டு
Effective Area-காரியப்படுபரப்பு
Effort Arm-தாக்குங்கை
Ejector-தள்ளுபொறி
Egret-கொக்கு
Electric charges-மின்சுமை
Electric immersion heater-மின் [முழுகுசூட்டுக்கோல்
,, Iron-மின்தேய்ப்பெட்டி
,, Light-மின் விளக்கு
,, Torch-கைமின்னி
,, Oven-மின் அடுப்பு
Electro type-மின் அச்சு

Electro typing-மின் அச்சு அடித்தல்
Elevator-உயர்த்துபொறி, உயர்த்தி
Entomology-பூச்சிநூல்
Eolythic Age-முன்கற்காலம்
Esters-கரிமஉப்புகள்
Ethane-இவ்வினி (ஈரினி)
Ethyle-இவ்வயில்
Ethylene-ஈரயிலினி
Even-இரட்டை, இரட்டிய
Exhaust pipe-வெளியேற்றுகுழாய்
Exhaust pump-இல்லாதிறைப்பான்
Experimental method-சோதனை [முறை
Experimental Science-சோதனை அறிவியல்
Expose-வெளிப்படுத்து, வெளிப்பட [வை
Exposure-வெளிப்படுத்தல், வெளிப் [படவைத்தல்
Extension-விரிகை, விரிவிடம்
Extreme-ஓரநிலை
Falcon-இராசாளி, வைரி
Family-குலம்
Far sighted-முன்னோக்குடைய
Fats-நிணங்கள்
Feeding-அருந்தல், அருத்தல்
Fiddle-பிடில், வில்யாழ்
Fiddle bow-யாழ்வில்
Film-மென்தகடு, படத்தகடு
Film reel-படச்சுருட்டு
Filter bed-வடிக்கட்டுபடுகை
Fire hydrant-தீயணைநீர்க்குழாய்
Fire tube-தீக்குழாய்
First principles-அடிப்புண்மைகள்
Flamingo-செங்கால்நாரை
Flycatcher-வழி மறித்தான்
Flywheel-ஓட்டுருளை
Formal dehyde-கரிசக நறவி
Fortnight-பன்னுன்குநாள், பக்கம்
Foundry-வார்ப்பிடம்
Fountain pen-ஊற்றுப்பேனு
Frame-சட்டம்
Frictional force-பிணர்வுத்தாக்கு
Frictional electriciy-பிணர்வுமின்
Fur-கொதிகலக்கறை [சாரம்
Galaxy-விண்மீன் தொகுதி
Galvanised iron-துத்தத்தகடு
Gaslight ஆவி விளக்கு
Gasoline-ஆவி நெய்
General Science-பொதுப்படு அறிவி
Genus-இனம் [யல்
Gill breathers-செவிள் மூச்சுடையி
Gilt-பொய்ப்பூச்சு
Girder கட்டுவிட்டம்
Grackle நாகணவாய்ப்புள்
Grade தரம்
Gradation படித்தரம்
Gramaphone plate பேசுதட்டு
,, Record பேசுதட்டு, பேச்சுப்பதிவு
Granular மணிமணியான
Grindstone அறை கல்
Gross கழிபடா, தடித்த
Grove cell குரவுக்கலம்
Gull கடற் காக்கை
Harmonium இசைப்பெட்டி, ஒத்தி [சைப்பான்
Hawk eagle இராசாளிக்கழுகு
Hemp oil புளிச்சைநெய்
Heptane எழினி
Hereditary பிறவிப்பண்பான
Heron செங்நாரை
Hero worship வீரவழிபாடு
Hexane ஆறினி
Hexile ஆறயில்
Hexylene ஆறிலினி
Himalayan pheasant காட்டுச் சேவல்
House sparrow சிட்டுக்குருவி, ஊர்க் [குருவி
Hybernation மாரி (நெடுந்) தூக்கம்
Hydrilla வேலம்பாசி

(தொடரும்.)

# பிழையுற்ற பாடல்களும் திருத்தங்களும்

திரு. வே. மு. ஸ்ரீநிவாச முதலியார் அவர்கள்
காஞ்சீபுரம்

3. "எழிலி யுறைநீங்கின் ஈண்டையார்க் கின்னா
துழலி னினியமராத் தோசை நன்கின்னா
குழவிக ளுற்ற பிணியின்னா இன்னா
அழகுடையான் பேதை யெனல்"

என்பது இன்னா நாற்பதுள்ளே முப்பத்தாறும் செய்யுள்.

அச்செய்யுளின் இடை அடி "**குழலினிய மன்றத்து ளோசை நன்கின்னா**" என்று இருப்பின் சிறப்பும் கவிக்கருத்தும் ஆகும். என்னை? பறை நன்று பண் அமையா யாழின் (நான்மணி. 15.) என்ற ஆசிரியர் தம் கருத்துக்கு ஏற்ப "**இசை வல்லான் ஒருவனால் குழல் இயம்பப்படும் இனிய அவையின்கண்ணே அக் குழலோசையினைக் கேளாவண்ணம் மறுத்து எழும் ஆரவார ஓசை மிக்க துன்பத்தைத்தரும்**" என்றுபொருள் கோடற்குப்பொருத்த மாகும் ஆதலால். அன்றி, **மரத்தோசை** என்ற பாடத்தைக் கொள்ளின் பொருள் பொலிவு அழிதலன்றிக் கவிக் கருத்துங் கெடுகின்றது.

4. "கோடிறு முரித்தன்ன கூற னல்வன் துநகினஞ் சேற்று
இடறுங் கழனிப் பழனத் தரசை யெழிலி மையோர்
படிறு மொழிந்து பருகக் கொடுத்துப்பாவை நஞ்ச
மிடறு தடுத்தது வுமடியேங்கள் விதி வசமே"

என்பது பதினோராந் திருமுறையுள்ளே கபில தேவ நாயனார் இயற்றிய சிவபெருமான் திருவிரட்டை மணிமாலையின் இருபத்தெட்டாஞ் செய்யுள். மேற்காட்டிய பாவின் முதல் அடியில் கண்டபாடம் ஆசிரியர் திரிசிரபுரம்சோடசாவதானம் சுப்பராய

செட்டியார் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட புத்தகத்துள்ளது. ஆசிரியர், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட புத்தகத்தில் "கோடிறு முரித்தன்ன கூருள னல்லன் குருகினஞ் செற்று" என்ற பாடம் உளது. இவ்விரு வகைப் பாடங்களும் பிழையுற்ற பாடங்களேயாகும். அப் பாவின் முதலடியைக் "கோடிறு முறித்தன்ன கூன்று ளலவன் குருகினஞ் செற்று" எனத்திருத்திக் கொள்ளின் கவிச்சிறப்பும் கருத்தும் உடைத்தாம். என்னை? "மிதியுலைக் கொல்லன் முறி கோடிற்று அன்னக வைத்தாள் அலவன்" (பெரும்பா. 207 208) என்றார் பிறரும் ஆதலால். வடகடலின் கோடியில் இட்டதுகத் தடியின் தொளையுள் தென்கடலின் கோடியில் இட்ட ஒரு சிறிய கழி தன்னுல்சென்று செறிந்தால் அன்னஆய்ந்து அறிதற்கரிய இத்திருத்தம் தமிழ்ப் புரவலரும், உத்தம தானபதியாரும் ஆகிய மகாமகோபாத்தியாயர் உயர்திருவாளர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களால் திருக்காளத்தி அப்பனுர் தம் திருக் கோயிலின் திருப்பணி வள்ளலாரும் தமிழ்ப் பேரறிஞரும் சிவ நேசரும்ஆகிய திருவாளர் மெ. அரு. நா. இராமநாதன்செட்டியார் அவர்கட்குச் சொல்லப்பட்டுப் பின் அத் திருச்செட்டியார் அவர்களால் திருவூறல்—(திருக்கூவம்) திருப்பதியில் வாழும் திருவாளர்கள் வைத்தியநாத முதலியார் முத்து முதலியார் என்ற தமிழறிஞர்கள் ஆகிய இருவர்கட்குச் சொல்லப்பட்டது. பின் அவ்விரு அறிஞர்களும் எனக்குச் சொன்னுர்கள். இத் திருத்தம் பெருமை மிக்கப் பேராசியரால் ஆய்ந்து சொல்லப் பட்டதாதலால் தமிழாயும் அறிஞர் பலரும் இத்திருத்தத்தால் அப்பாக்களின் உண்மைப்பொருளை அறிந்து அகமகிழ்தல் வேண்டியும், இத்திருத்தம், கேட்டவர்களளவில் நின்று அழிவு உருமல் தமிழுலகில் நிலைத்து நிற்றல் பொருட்டும் அதனை யான் வெளியிடலை விரும்பினேன். என்செயல் மிகையாயின் என்னை அப்பேராசிரியர் மன்னிப்பாராக.

உ

# தமிழ்ச்செய்திகள்

**கரந்தைத் தமிழ்ச்சங்கம்** :—புலவர்கல்லூரியில் இதுபோது நடைபெற்றுவரும் இரண்டு வகுப்புகளின் செலவிற்குப் பணம் வேண்டியிருக்கின்றது. அன்பர்களைக் கண்டு உதவிபெறுதற் பொருட்டு சங்கத்தலைவர் கிறித்து விடுமுறையில் பலவூர்கட்குச் சென்று, அன்பர்களிடம் குறை வேண்டினர். தமிழன்பரில் எளியவர்கூட ஆண்டு ஒன்றிற்கு ரூபா ஒன்றாகிலும் கொடுத்துக் கல்லூரியை வளர்க்கலாம். தமிழின் ஆக்கத்தில் ஆர்வமுடைய செல்வர்கள் ஆண்டுதோறும் ரூபா அறுபது தந்து ஒரு மாணவனைப் புரக்கலாம். தமிழ்ப் புலவர்கள் ஆங்காங்கு முயன்று அன்பர்களைச் சங்கத்தில் தொடர்பு கொள்ளவும் இயன்றபடி உதவி செய்யவும் தூண்டுதல் செய்தால், சங்கம் மேற்கொண்டிருக்கும் பணிகள் செவ்வனம் நடைபெறும்.

**ஒரு துயரம்**.—இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை திருவாரூர், **S. சோமசுந்தர தேசிகர்** அவர்கள், பிரமாதி மார்கழி 10-தேதியன்று உலக வாழ்வை நீத்தனர். சென்னைப் பல்கலைக் கழகத்து (Lexicon) அகராதி வேலையில் பணிபுரிந்துவந்த தமிழ்ப் புலவர்; ஆராய்ச்சி நூலும் கட்டுரையும் இயற்றி வந்தவர்; இறந்தமை கருதி தமிழுலகு வருந்துகின்றது.

**சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பாடக்குழுமம்** :—(Tamil Board of studies of the Madras University) 1940-ஆம் ஆண்டின் கூட்டம் 6-1-40 தேதி அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக்கழகத்தின் தலைமை பண்டிதமணியார் அவர்கட்குக் கிடைத்தது தமிழ்ப் புலவர்களின் பெருமைக்கு ஆக்கந்தரும் நற்செய்தியாகும். ஆங்கிலப் பட்டம் பெற்றவர்களே இத்தகைய பொறுப்புகளை ஏற்கத் தகுந்தவர் எனும் குருட்டுக் கொள்கை தவறுடைத்தெனப் பொதுமக்கள் உணர்ந்து கொண்டனர்.

B. O. L. தேர்வு :— கீழ்க்காணும் தகுதியுடையோர் இத் தேர்வுக்குப் போகலாம் என்பது விதி.

வித்துவான் முதலிய O. T. தேர்வுகட்குப்போகும் தகுதியுடன் 'Matriculation' அல்லது அதனையொத்ததொரு தேர்வு பெற்றவராயிருத்தல்வேண்டும். ஆனால் வடமொழியில் B. O. L. பட்டம்பெற விரும்புவோர்மட்டும் அரசியலார் நடத்தும் வடமொழி நுழைவுத் தேர்வில் (Sanskrit Entrance Examination) ஆங்கில வினாத்தாளில் நூற்றுக்கு 35 எண்கள் (Marks) பெற்றுவிட்டால் Matriculation அல்லது அதனையொத்த தேர்வில் வெற்றிபெற வேண்டாம். இவ்விதிகளைக் கூர்ந்து நோக்கினால் வடமொழி மாணவர்கட்கு மிகவும் இலேசான ஆங்கிலப் பயிற்சியும் தேர்வும் நியமித்திருப்பதும், தமிழ் முதலிய பிறமொழியாளர்கட்குஆங்கிலம், கலைநூற்கள் முதலியவற்றில் Matriculation தகுதி வேண்டப்படுவதும் விளக்கமாகிறது.

வித்துவான் தேர்வில் 'Diploma' வும், B. O. L. தேர்வில் 'Degree'யும் பெறுகின்றனர். B. O. L. பட்டதாரிகட்கு வித்துவான்களுக்கு இல்லா சிறந்த உரிமைகளும் உண்டு. ஆதலால் ஆங்கிலக் கல்வியும், அறிவு நூற்பயிற்சியும் வேண்டுமென விதித்தது ஒழுங்குதான். இவ்விதியின் நோக்கத்திற்குமாறாக வடமொழி மாணவர்க்கு அளித்திருக்கும் வசதி நேரிதல்லவெனக்கண்டு அதனை அகற்றவேண்டுமெனத் தமிழ்ப் பாடக் குழுமத்தினர் (Tamil Board of Studies) முடிவுசெய்து அனுப்பினர். கல்விக் குழுவினராலும் (Academic Council) கீழைமொழிகளின் பாடக்குழுவினராலும் (Board of Studies in Oriental Languages) இம்முடிபு கருதப் பட்டது. வடமொழி மாணவர்க்கு அளித்த வசதியை எல்லா

மொழிகட்கும் அளித்துவிடலாமென விதியைத் திருத்தலா மெனும் முடிபிற்குவந்து அக்கழகத்தினர் அதனை மீட்டும் கருதுமாறு தமிழ்ப் பாடக் குழுமத்துக்கு அனுப்பினர். வடமொழி நுழைவுத்தேர்வில் ஆங்கிலபாடத்தில் நூற்றுக்கு 35 எண்கள் பெற்றவர் வடமொழியில் B. O. L. தேர்வுக்குப்போகும் தகுதி உண்டு என்ற சிறப்பு விதியை அகற்றவே வேண்டு மென்றும், (Matriculation) தேர்வின் தகுதியைக்குறைக்க வேண்டு மெனக் கருதினால், வடமொழியை ஒப்ப எல்லா மொழிகட்கும் ஒரு படித்தான குறைந்த தகுதியை விதிக்க வேண்டுமெனவும் தமிழ்ப்பாடக் குழுமத்தினர் கருதி முடித்தனர்.

B. O. L. தேர்வு கல்லூரிகளில் முறையே பயின்றுவரும் மாணவர்க்கே உரியது என்பது விதி. இத்தேர்வுக்கான கல்லூரி தமிழ்மொழி பற்றியவரை மாகாணத்தில் எவ்விடத்தும் இல்லை. திருவையாற்று அரசர் கல்லூரி ஒன்றுதான் தமிழ்ப் படிப்போர்க்கு இடமாயுள்ளது. கல்லூரிகள் இல்லாமைகருதி இடைக் காலவிதி (Transitory Regulation) என ஒரு சிறப்புவிதி ஏற்படுத்தி இருக்கின்றனர். இதன்படி வித்துவான் பட்டத்தின் தகுதி பெற்றவர், B. O. L. பட்டம் பெற விரும்பினால் அதே ஆண்டிலாதல், வெவ்வேறு ஆண்டுகளிலாதல் நடுத்தரத்தேர்வின் (Intermediate) ஆங்கிலபாடத்தில் தேர்வுபெற வேண்டும். அதன் பிறகு B. O. L. தேர்வுச்குப் பள்ளியில் பயிலாமலே போகலாம். இந்த விதி 1940-ஆண்டிற்குமேல் செலாவணி இல்லை. இக் காலவெல்லையை 1942 வரை நீட்டித்து வைக்க வேண்டுமெனத் தமிழ்ப்பாடக் குழுமத்தினர் முடிவு செய்தனர்.

தமிழன்பர்கள் உன்னிப்பில் வைக்கவேண்டிய செய்தி ஒன்று. வடமொழியாளர்கட்குத் தமிழ்நாட்டின் எல்லையில் பல கல்லூரிகள் இருக்கின்றன. தமிழ்மொழிக்கோ திருவையாற் றில் ஒரே ஒரு கலாசாலைதான் இருக்கிறது. அங்கும், தமிழ்ப் பிரிவின் ஆக்கம் சில ஆண்டுகளாகச் சீர் குலைந்து வருகின்றது. பல்கலைக் கழகத்திலோ வடமொழியாளர் விழிப்புடனிருந்து வடமொழி பயிலுவோர்க்குச் சிறப்பாகப் பலவசதிகளை அமைத்

துக்கொண்டுள்ளனர். 'தமிழே தமிழ்' என ஆர்ப்பரிக்கும் தமிழன்பர் ஆக்கவேலைகளைத் தொடங்கவும் இல்லை; ஆங்காங்கு சிறு முயற்சிகள் தோன்றினால் அவற்றிற்குத் துணைசெய்வதும் இல்லை. இக்குறைபாடு நீங்குதற்கான முறைகளைக் கண்டு தமிழ் மக்கள் ஆவன புரிவாராக. தமிழகத்தில் தமிழ்மொழி ஆக்கம்குன்றவும், பிறமொழிகளின் ஆக்கம்பெருகவும் காண்பது, நாணுத்தருகின்றது. தன்னுரிமையை இழந்தோம்; அடிமை வாழ்வில் தாழ்ந்தோம் என்பது கண்கூடாக விளங்குகின்றது.

---

**சைவசித்தாந்த மா சமாசம், சென்னை: 34-ஆம் ஆண்டுவிழா:—** குன்றக்குடியில் கோவை. வழக்கறிஞர், திரு. C. K. **சுப்பிரமணிய முதலியார்** அவர்களின் தலைமையில், 1939 டிசம்பர் 29, 30, 31 தேதிகளில் செவ்வனம் நடைபெற்றது. இதன் ஓர் அங்கமாக நிகழ்ந்துவரும் சைவ இளைஞரின் மாநாடு திரு. 'பாலகவி' **வயிநாகரம். லே. இராமநாதன் செட்டியார்** அவர்களின் தலைமையில் இரண்டாவது நாள் நடந்தது.

வரவேற்புக் கழகத்தினராயிருந்து பணிபுரிந்த நகரத்தினரின் பேருதவிகள் நன்றியுடன் போற்றற்பாலன. சித்தாந்த சாத்திரம், திருமந்திரம், திருவாசகம் பதினொராந்திருமுறை ஆகிய தெய்வப்பனுவல்களை இரண்டாம் பதிப்பாக சமாசத்தார் வெளியிடுதற்குப் பெருந்தொகைகளைக் கொடுத்து உதவமுன் வந்த செல்வர்கட்குச் சைவ நன்மக்களின் நன்றி உரியதாகும். இத்தகைய நூல் வெளியீட்டில் உளங்கொண்டு ஊக்கிவரும் அன்பர்கள் சைவத்தேர்வுகளில் வெற்றியுறும் மாணவர்க்கு தக்க பொற்கிழிகளைப் பரிசாக வழங்குதற்கு வழிதுறைகளை நாடியமைப்பது பயன் தரக்கூடிய செயலாகும். ஏழை மாணவர்களைப் புரந்து சைவநெறியில் வளர்த்தல், சைவபோதகர்களைப்

பயிற்றிப் பணிசெய்தல், சைவநெறிக்கு இயைந்த பாடநூல்களை யியற்றல், அவை பயிற்றுதற்கான பாடசாலைகளைக் கண்டு பணி கொள்ளுதல் முதலிய அறச்செயல்களைச் சமாசத்தார் மேற் கொள்ளுதல் நன்று.

---

## புத்தக மதிப்புரை

**இறையனார் அகப்பொருள் :**—சென்னை, பவானந்தர் கழக வெளியீடு, க., பக்கம் 400. விலை ரூபா. 2—8—0.

தமிழரின் நன்மையினைநாடித் தமிழ்மொழியினைப் பல்லாற்றானும் வளர்த்தற் பொருட்டுத் திருவாளர். திவான்பகதூர். ச. பவானந்தம் பிள்ளையவர்கள் தம்பொருளால் நிறுவப்பெற்ற இக்கழகத்தின் முதல் வெளியீடாகு மிந்நூல். உரையாசிரியர், தமிழ்ப் பேராசிரியர் முதலியோரால் தொன்று தொட்டுப் போற்றப்பெற்ற, சொற்பொருட்செறிவு மல்கிய நக்கீரனார்உரையோடு இலங்குகின்றது. புலவர். திரு. கா. ர. கோவிந்தராச முதலியாரது மேற்கோள் இலக்கியக் குறிப்பும் உரையின் அருந்தொடர்க் குறிப்புரையுங் கூடியது; வித்துவான். திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையின் அரும்பதம் முதலியவற்றின் அகராதியும் நூலிற் பயின்று வரும் உவமத்திரட்டும் ஒருங்கே இணைந்தது; மிகநல்ல தாளில் திருந்திய முறையில் அழகிய கட்டுடன் மாணவரும் பெற்றுப் பயன் பெருமாறு வெளிவந்த இந்நூலை, தமிழ்மக்கள் ஆதரிக்கக் கடன் பூண்டவராவார்.

# நன்கொடை

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| **கரந்தைத் தமிழ்ச் சங்கத்துக்கு** | | | | |
| திரு. ஆ. சுப்பையாபிள்ளை M. A. அவர்கள் இம்பீரியல்பாங்கி | | 10 | 0 | 0 |
| **கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரிக்கு** | | | | |
| திரு. நே. அ. வர்த்தமான முதலியார் அவர்கள் | | 50 | 0 | 0 |
| **புலவர் கல்லூரிக்கு** | | | | |
| ,, V. P. காயாரோகணம்பிள்ளை அவர்கள் தமிழவேள். | நாகை | 25 | 0 | 0 |
| ,, த. வே. உமாமகேசுவரம்பிள்ளை ,, | கரந்தை | 9 | 12 | 0 |
| ,, இராமச்சந்திரய்யர் | நன்னிலம் | 5 | 0 | 0 |
| ,, வித்துவான், C. இலக்குவனர் ,, | ,, | 5 | 0 | 0 |
| ,, திருமதி, தனலெட்சுமிஅம்மை ,, | ,, | 1 | 0 | 0 |
| **திக்கற்றோர் இல்லத்துக்கு** | | | | |
| ,, நா. கந்தசாமிபிள்ளை Rtd. Engr. அவர்கள் தஞ்சை அரிசி 5 படியுடன் | | 2 | 0 | 0 |
| **மருத்துவசாலைக்கு** | | | | |
| ஓர் அன்பர் | | 120 | 0 | 0 |

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.